விலை: 50.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 22 புதன்கிழமை (06.01.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 018

## ஜெனிவா விவகாரம் தொடர்பில் ஆராய 3 தமிழ்க் கட்சிகள் கொழும்பில் இன்று கூடுகின்றன

### இணக்கப்பாடு சாத்தியப்படுமா?

(கொழும்பு)

ஜெனிவா விவகாரம் தொடர்பில் ஆராய 3 தமிழ்க் கட்சிகள் கொழும்பில் இன்று கூடி ஆராய உள்ளன.

கடந்த 3ஆம் திகதி வவுனியாவில் இலங்கை தமிழ் அரசு கட்சி, தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் கூட்டணி ஆகிய 3 கட்சிகள் கூடி கலந்துரையாடல் நடத்தினார்கள். அதன் பின்னர் செய்தியாளர் 19

## அரசியல் கைதிகளை

விடுதலை செய்யக்கோரி வடக்கு – கிழக்கில் போராட்டம்

3ஆம் பக்கம் பார்க்க

## சிவல்புரி சிங்காரம்

எழுதிய

## புத்தாண்டு பலன்

நாளை முதல் உங்கள் வலம்புரியில்

## இலங்கை வந்தடைந்தார்

# இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர்

## இரு நாட்டு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை



(கொழும்பு)

இந்திய வெளியுறவு அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் நேற்று மாலை இலங்கை வந்தடைந்தார்.

இரு நாட்டு உறவுகள் மற்றும் மீனவர்கள் தொடர்பான பிரச்சினை பற்றி இலங்கை அரசு பிரதிநிதிகளுடன் ஜெய்சங்கர் பேச்சுவார்த்தை நடத்தினார். (19ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டில் நேற்றும் 255 பேருக்கு தொற்று உறுதி

(கொழும்பு)

நாட்டில் நேற்றும் 255 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதை 19

## முகக் கவசம் அணியாத 300 பேருக்கு பரிசோதனை

### இருவருக்கு தொற்று உறுதி

(கொழும்பு)

முகக்கவசம் அணியாது நடமாடிய 300 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட ரெபிட் அன்டிஜன் பரிசோதனையில் இருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். 19

## தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்க

### பிணையாளர்களாக தமிழ் எம்.பிகள் தயார்

சபையில் சார்ள்ஸ் நிர்மலநாதன் எடுத்துரைப்பு



(கொழும்பு)

"கொரோனா என்ற கொடிய வைரஸ நோய்த் தொற்றில் இருந்து தமிழ் அரசியல் கைதிகளின் உயிர்களைப் பாதுகாக்க வேண்டியதன் நிமிர்த்தம் அவர்கள் அனைவரையும் உடனடியாக அரசு விடுதலை செய்ய வேண்டும் அல்லது அவர்களைப் பிணையி 19

## வடக்கில் நேற்றும் 13 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் நேற்று ஒரே நாளில் மட்டும் 13 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் நேற்று இடம்பெற்ற பிசிஆர் பரிசோதனையிலேயே இந்த 13 பேரும் அடையாளம் காணப்பட்டனர்.

வவுனியா பட்டாணிச்சூர் பகுதியில் கடந்த இரு தினங்களுக்கு முன் 19

## வெளிநாடு செல்வதற்கு கொழும்பு சென்ற

### பூநகரி, அளவெட்டி வாசிகளுக்கு கொரோனா

(முறிகண்டி)

கிளிநொச்சியில் பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மூவருக்கு 19

## கொரோனாவால் மேலும் இருவர் பலி

### உயிரிழப்பு 217 ஆக உயர்வு

(கொழும்பு)

கோவிட் 19 தொற்றினால் நாட்டில் மேலும் இருவர் உயிரிழந்துள்ள 19



## யாழ்-மரவட்ட நுழைவிடங்களில்

பி.சி.ஆர் சோதனை

அரச அதிபர் மகேசன்

12ஆம் பக்கம் பார்க்க

## 29 வயது முடி திருத்துனர் மயங்கி விழுந்து மரணம்

### திருநெல்வேலியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

தலைமுடி திருத்தும் வேலை செய்து கொண்டிருந்த இளைஞர் ஒருவர் மயங்கி விழுந்து யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி 19

### பெப்ரவரி 2 ஆம் வாரத்திலேயே

# தரம் 1 இற்கான மாணவர்கள் பாடசாலைகளில் இணைக்கப்படுவர்

(கொழும்பு)

2021 ஆம் ஆண்டிற்கான தரம் 1 மாணவர்கள் பெப்ரவரி இரண்டாவது வாரத்தில் சேர்க்கப்படுவார்கள் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அமைச்சின் செயலாளர் கலாநிதி கபில பெரேரா நேற்று செய்தியாளர்களிடம் பேசும் போது, மேற்கு மாகாணம் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் உள்ள பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகளில், தரம் 2 முதல் 13 வரையிலான மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் ஜனவரி 11ஆம் திகதி ஆரம்பிக்கிறது.

தரம் 1 மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் பெப்ரவரி இரண்டாவது வாரத்தில் தொடங்கும்.

பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்கான சுகாதார வழிகாட்டுதல்களை கல்வி அமைச்சின் செயலாளர், மாகாண, வலய கல்வி பணிப்பாளர்களிற்கு அனுப்பி வைத்துள்ளார். வழிகாட்டுதல்கள் தொடர்பாக ஊழியர்களுடன் கலந்துரையாடுமாறு அதிபர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

நெறிமுறையைத் திருத்துவது குறித்த அவர்களின் கருத்துகளையும் பரிந்துரைகளையும் பெற ஒரு வரையறுக்கப்பட்ட கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு பெற்றோர்கள் கோரப்படுவார்கள் என்று அவர் கூறினார்.

இன்று முதல் ஜனவரி 9 வரை இந்த கூட்டங்கள் நடத்தப்படும் என்றார். (ம-03)

## பெற்றோர்களை வருகைதருமாறு அதிபர் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யா/இளையதம்பி இந்து வித்தியாலயத்தில் 2021 ஆம் ஆண்டில் தரம் 1, தரம் 6 இற்கு இணையவுள்ள மாணவர்களின் பெற்றோர் நாளை (07.01.2021) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வருகைதருமாறு வித்தியாலய அதிபர் அறிவித்துள்ளார். (ம-03)

## தேய்பிறை அட்டமி உற்சவம் இன்று

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் தலையாழி அருள்மிகு சாமுண்டாதேவி சமேத ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தில் தேய்பிறை அட்டமி உற்சவம் இன்று புதன்கிழமை மாலை விசேட பூசைகளுடன் வசந்தமண்டபத்தில் சுவாமி எழுந்தருளி நெய்விளக்கேற்றலும் சகஸ்ரநாம அர்ச்சனையும் நிகழவுள்ளது. (ம-03)

# நெல்லியடியில் வங்கி உட்பட 4 கடைகளுக்கு சீல் வைப்பு

(கரணவாய்)

கரவெட்டி சுகாதார பிரிவில் நேற்று செவ்வாய்க்கிழமை தொலைத்தொடர்பு நிறுவனம், CCTV கமரா விற்பனை நிலையம், வங்கி, உணவகம் உட்பட நான்கு நிலையங்கள் மூடப்பட்டுள்ளது.

பருத்தித்துறை புலோலி பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து அவர் சென்ற இடங்களை தனிமைப்படுத்தும் நடவடிக்கையை கரவெட்டி சுகாதார பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இதனடிப்படையில் கடந்த 30ஆம் திகதி நெல்லியடி பகுதியில் உள்ள உணவகம், தொலைத்தொடர்பு நிறுவனம், வங்கி என்பவற்றிற்கு சென்றமை உறுதி செய்யப்பட்டதையடுத்து அவற்றிற்கு சீல் வைக்கப்பட்டதுடன், தொலைத்தொடர்பு நிறுவனத்திற்கு அருகில் இருந்த CCTV கமரா விற்பனையாளர் குறித்த தினத்தில் தொலைத்தொடர்பு நிறுவனத்திற்கு சென்றமையால் அக் கடையும் சீல் வைக்கப்பட்டது.

மேற்குறித்த இடங்களுக்கு குறித்த தினத்தில் சென்றவர்கள் கொரோனா தொற்று பரவலைக் குறைக்கும் நோக்குடன் தாமாகவே முன்வந்து கரவெட்டி சுகாதார பிரிவினருக்கு தெரியப்படுத்துமாறு கரவெட்டி சுகாதார பிரிவினர் அறிவித்துள்ளனர். (ம-03,60)

## சுகாதார நடைமுறையை பின்பற்றாமையினால்

# நெல்லியடியில் வெதுப்பகம் ஒன்று சீல் வைப்பு

(கரணவாய்)

நெல்லியடி நகரில் உள்ள வெதுப்பகம் ஒன்று கோவிட் -19 நடைமுறையை பின்பற்றாமை காரணமாக கரவெட்டி சுகாதார பணிமனையால் நேற்று செவ்வாய்க்கிழமை சீல் வைக்கப்பட்டது.

நெல்லியடி பகுதியில் சில மாதங்களுக்கு முன்பு புதிதாக இவ் வெதுப்பகம் திறந்து வைக்கப்பட்டது.

இருப்பினும் வெதுப்பகத்திற்கு உள்நுளைவோர் கோவிட் 19 தடுப்பு முறைகளில் ஒன்றான கைகழுவுதற்கான ஏற்பாடுகள் செய்யப்படாமையால் வெதுப்பகத்திற்கு சீல் வைக்கப்பட்டது.

உரிய வசதிகள் ஏற்படுத்தப்படுமிடத்து மீளவும் திறப்பதற்கான அனுமதி வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-03,60)




### சுகாதாரப் பாதுகாப்புடன்

# பாடசாலைகளை மீண்டும் திறக்க ஏற்பாடுகள் பூர்த்தி

(கொழும்பு)

சுகாதாரப் பாதுகாப்பு முறையின் கீழ் திட்டமிட்டபடி பாடசாலைகளை மீண்டும் திறக்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, மேல் மாகாணம் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகள் தவிர அனைத்து பாடசாலைகளும் ஜனவரி 11ஆம் திகதி முதல் தரம் 2 தொடக்கம் தரம் 13 வரை ஆரம்பிக்கப்படும்.

தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் உள்ள பாடசாலைகளைத் தவிர, மேல் மாகாணத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளும் ஜனவரி 25ஆம் திகதி முதல் தரம் 11 மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்.

கோவிட் -19 நிலைமையை எதிர்கொண்டு சுகாதார அதிகாரிகளின் வழிகாட்டுதல் மற்றும் மேற்பார்வையின் கீழ் வழிகாட்டுதல்களின்படி பாடசாலைகளை தொடங்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தை கல்வி அமைச்சின் செயலாளர் வலியுறுத்தியுள்ளார்.

அதன்படி, பாடசாலை சுகாதார விருத்திக் குழுவில் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் உறுப்பினர்கள் உட்பட அனைத்து தரப்பினரும் பாடசாலையில் அனைவரது ஆரோக்கியத்தை உறுதி செய்வதற்கு பொறுப்புடன் செயல்பட வேண்டும். (ம-03)

### பருத்தித்துறை புலோலியில்

# 23 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டன

(கரணவாய்)

பருத்தித்துறை புலோலி பகுதியில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து அவருடன் பழகியோரை சுய தனிமைப்படுத்தி வைக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனர். பருத்தித்துறை புலோலி பகுதியில் நேற்று முன்தினம் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து அவருடன் நெருங்கிப் பழகிய உறவினர்கள், நண்பர்கள் என 23 குடும்பங்கள் சுய தனிமைப்படுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கான பி.சி.ஆர் பரிசோதனைகள் 10 நாட்களின் பின்னர் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. (ம-03,60)

## எமது உறவுகள் பயங்கரவாதிகள் இல்லை

# அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரி


# வடக்கு-கிழக்கில் போராட்டங்கள் முன்னெடுப்பு



(யாழ்ப்பாணம்)



(சாவகச்சேரி)



(கிளிநொச்சி)




(வவுனியா)



(மாங்குளம்)




(மன்னார்)



(முல்லைத்தீவு)




(மட்டக்களப்பு)

அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரி பல்வேறு இடங்களில் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

நேற்றுக் காலை ஆரம்பமான போரட்டங்களில் அரசியல் கைதிகளின் குடும்பங்கள், சிவில் அமைப்புக்கள், பொது மக்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், தவிசாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

- இலங்கை அரசே தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்.
- தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கு
- தமிழ் அரசியல் கைதிகள் பயங்கரவாதிகள் இல்லை.
- எமது உறவுகளை சிறையில் மடிய விடவேண்டாம்.

போன்ற சுலோகங்களை ஏந்தியவாறு போரட்டத்தில் ஈடுபட்டனர்.

(நி-33-30-100-316-312-250-281-285)

# சிங்களவருக்கு ஒரு நீதி தமிழருக்கு ஒரு நீதி ?

## ரவிகரன் காட்டம்

(கிளிநொச்சி)

தமிழ் அரசியல் கைதிகள் நீண்ட காலமாக சிறைகளிலே வாடுகின்றனர். அவர்களின் விடுவிப்புத் தொடர்பில் அரச தரப்பு கரிசனை செலுத்துவதில்லை.

ஆனால் பாரிய குற்றச் செயல்களுடன் கைதுசெய்யப்பட்ட பௌத்த தேரர்களையும், மரண தண்டனை விதிக்கப்பட்ட பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இராணுவ அதிகாரிகளையும் பொது மன்னிப்பு அடிப்படையில் அரசு விடுதலை செய்கிறது.

அப்படியாயின் இந்த நாட்டில் சிங்களவர்களுக்கு ஒரு நீதி, தமிழர்களுக்கு ஒரு நீதியா? இவ்வாறு முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

முல்லைத்தீவு - மாவட்ட செயலகத்தின் முன்பாக நேற்று செவ்வாய்க்கிழமை அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனம் (எக்டோ) அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஆர்ப் பாட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், எங்களுடைய தமிழ் அரசியல் கைதிகள் நீண்டகாலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

அவர்கள் தமிழர்கள் என்ற ஒரே காரணத்திற்காகவே இவ்வாறு நீண்டகாலம் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டு பழிவாங்கப்படுகின்றார்கள் என்பதே உண்மையாகும்.

அரசியல் கைதிகள் பயங்கரவாதிகள் எனில், அவர்களை வழிநடத்திய பொறுப்புவாய்ந்த பலர் வெளியிலே சுதந்திரமாக உலாவருவது ஏன்?

குறிப்பாக அரசுக்கு சார்பாக இருக்கும் பல முக்கியமானவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளார்கள். அப்பாவிகளே தற்போதும் சிறைகளில் வாடுகின்றார்கள்.

அரசியல் கைதிகளுடைய குடும்பங்களை யாருமே கவனிக்காத நிலையில் அவர்களும் பலத்த இன்னல்களுக்கு முகம்கொடுத்துவருகின்றனர்.

அரசாங்கம் என்பது நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் பொதுவாக செயற்பட வேண்டும். தனியாக சிங்களவர்களுக்கு மாத்திரம்தான் அரசாங்கமென செயற்படுவது நியாயமான செயற்பாடல்ல. எனவே தமிழ் அரசியல் கைதிகளுக்கும் பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்யப்படவேண்டும் என்பதே எனது கோரிக்கை என அவர் வலியுறுத்தினார். (4-5)

# உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் இறப்பு வீதம் மிகக்குறைவு

## உலக சுகாதார ஸ்தாபனம் பாராட்டு

(கொழும்பு)

உலகளவில் ஒப்பிடும் போது நாட்டின் இறப்பு விகிதம் மிகக் குறைவாக இருப்பதாகவும் கொரோனாத் தொற்றினை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் இலங்கை சிறப்பாக செயற்படுவதாகவும் உலக சுகாதார ஸ்தாபனம் பாராட்டு தெரிவித்துள்ளது.

ஒக்டோபர் மாதத்திலிருந்து கொரோனாத் தொற்று அதிகரித்துள்ள போதிலும் தற்போது அடையாளம் காணப்படும் நோயாளிகள் ஒப்பீட்டளவில் குறைவாக இருப்பதாகவும் உலக சுகாதார ஸ்தாபனம் சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த மூன்று மாதங்களில் கொரோனாத் தொற்றினால் 200க்கும் மேற்பட்ட இறப்புகளுடன் இலங்கையில் 40,000 க்கும் மேற்பட்ட நோயாளிகளும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வலுவான பொதுச் சுகாதார நடவடிக்கைகளும் பரிசோதனை மற்றும் தனிமைப்படுத்துதல் நடவடிக்கைகளும் இதற்கு காரணம் என்றும் உலக சுகாதார ஸ்தாபனம் சுட்டிக் காட்டியுள்ளது.

கடந்த ஆண்டு ஜனவரி முதல் 215 இறப்புகளுடன் 45,000 க்கும் மேற்பட்டவர்களுக்கு கொரோனாத்தொற்றும் இலங்கையில் பதிவாகியுள்ளன.

ஏறக்குறைய ஒரு வருடம் முன்பு கொரோனாத் தொற்று நாட்டில் பரவத் தொடங்கியதிலிருந்து 38,000 இலங்கையர்கள் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-4)

## டக்ளஸின் வேண்டுகோளுக்கிணங்க

# கிளிநொச்சி சர்வதேச விளையாட்டரங்கை சீரமைக்க அமைச்சர் நாமல் ராஜபக்ஷ நடவடிக்கை



(அக்கராயன்)

**கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள சர்வதேச விளையாட்டரங்கை பொறுப் பேற்று சீரமைப்பதற்கான நடவடிக்கைகளை கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டு கோளுக்கமைய விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ மேற்கொண்டுள்ளார்.**

விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் பணிப்பின் பேரில் கிளிநொச்சி விளையாட்டரங்க புனரமைப்புப்பணிகளுக்கென நியமிக்கப்பட்ட இணைப்பாளர் பிரியந்த, லங்கசிங்க மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் கீழ்வரும் யுத் கோர்ப் வடமாகாணப்பணிப்பாளர் சந்தானாத் ஆகியோர் நேற்று முன்தினம் கிளிநொச்சி விளையாட்டரங்குக்கு நேரில் வருகைதந்து அரங்கின் நிலைமையை ஆராய்ந்தனர்.

இதன்போது, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் இணைப்பாளர் வை.தவநாதன் சார்பில், மேலதிக இணைப்பாளர் கோ.றுஷாங்கன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் மாவட்ட இணைப்பாளர் அனுரகாந்தன் ஆகியோர் விளையாட்டரங்கின் தற்போதைய நிலை தொடர்பாகவும் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தப்பணிகள் தொடர்பாகவும் விளக்கமளித்தனர்.

உள்ளக விளையாட்டரங்கு, பரந்த பார்வையாளர் கூடத்துடன் கூடிய திறந்த வெளி அரங்கு, சர்வதேச தரத்திலான நீச்சல் தடாகம் என்பவற்றைக் கொண்ட இந்த விளையாட்டரங்கில் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தப்பணிகள் தொடர்பாக அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் பிரதிநிதிகளுக்கு இதன்போது விரிவாக எடுத்துக்கூறப்பட்டது.

2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலின் கீழ் அப்போது பாரம்பரிய கைத்தொழில் அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தாவுடன் இணைந்து முன்னெடுக்கப்பட்ட கிளிநொச்சி சர்வதேச விளையாட்டரங்குக்கான நிர்மாணப் பணிகள் முழுமையடைய முன்னரே 2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டதால், விளையாட்டரங்கப் பணிகள் இடையில் தடைப்பட்டிருந்தன. பின்னர், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வின் காலத்தில் அப்போதைய அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோவின் தலைமையில் அவசர அவசரமாக விளையாட்டரங் கப்பணிகள் அரைகுறையாக மேற்கொள்ளப்பட்ட நிலையில் பொதுமக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-350)

## ரஷ்யாவை வீழ்த்தியது கனடா

2021 உலக ஜூனியர் ஐஸ் ஹொக்கி சம்பியன்ஷிப் அரையிறு ஆட்டத்தில் கனடா ரஷ்யாவை வீழ்த்தியுள்ளது.


கனடாவின் எட்மண்டனில் நேற்று முன்தினம் நடந்த இந்த அரையிறுத் ஆட்டத்தில் 5-0 என்ற கோல் கணக்கில் ரஷ்யாவை வீழ்த்தியுள்ளது.

அலெக்ஸ் நியூஹோக், கானர் மெக்மிகேல் கோல் பெர்பெட்டி, பிராடன் ஷ்னைடர், டிலான் கோசன்ஸ் ஆகியோர் கனடா அணி சார்பில் கோல்களை அடித்தனர்.

தொடரின் இரண்டாவது அரையிறுதிப் போட்டியானது அமெரிக்கா மற்றும் பின்லாந்து அணிகளுக் கிடையில் நடைபெறவுள்ளது. (4)

## இலங்கை வந்தடைந்த

# இங்கிலாந்து வீரருக்கு கொரோனா



இரண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவதற்காக இலங்கை வந்துள்ள இங்கிலாந்து அணியில் மொயீன் அலிக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து அணி இலங்கையில் சுற்றுப் பயணம் செய்து இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இதற்காக இங்கிலாந்து அணி வீரர்கள் நேற்று முன்தினம் இலங்கை வந்தடைந்தனர். அப்போது விமான நிலையத்தில் வைத்து அவர்களுக்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அதில் மொயீன் அலிக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனால் இலங்கை அரசின் கொரோனா வழிகாட்டுதல் நெறிமுறைப்படி 10 நாட்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். அவருடன் நெருங்கிய தொடர்பில் இருந்த கிறிஸ் வோக்ஸ் தன்னைத்தானே தனிமைப்படுத்திக் கொண்டார். (4)

# ஆஸியை இந்தியா வீழ்த்த முடியாது

## மார்தட்டும் முன்னாள் வீரர்

இந்திய அணி, பிரிஸ்பேனில் நடக்கும் போட்டியை நினைத்து பயப்படுவதாகவும் இங்கு அவுஸ்திரேலியாவை யாரும் ஜெயித்தது கிடையாது என்று முன்னாள் வீரர் பிராட் ஹாடின் தெரிவித்துள்ளார்.

இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையேயான மூன்றாவது டெஸ்ட் போட்டி பிரிஸ்பேனில் இருக்கும் கப்பா என்று அழைக்கப்படும் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அங்கு கொரோனா வைரஸ் தாக்கம் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் அதிக அளவு கடைப் பிடிக்கப்படுவதால் அதனைக் காரணம் காட்டி இந்தியா அங்கு செல்ல விரும்பவில்லை எனவும் விளையாட விருப்பமில்லாமல் இருப்பதாகவும் செய்தி வெளியானது.


அதுமட்டுமின்றி, இந்த மைதானத்தில் சுமார் 30 வருடத்திற்கும் மேலாக எந்த அணியும் அங்கு அவுஸ்திரேலியாவை வீழ்த்தியது கிடையாது. இந்திய அணியும் அந்த மைதானத்தில் மோசமான சாதனையை பதிவு செய்துள்ளது.

இதன் காரணமாகவே இந்தியா இங்கு செல்ல மறுப்பதாக அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் பிராட் ஹாடின் கிண்டலாக பேசியுள்ளார்.

அவர், கிரிக்கெட் பார்வையில் பார்க்கும் போது இந்திய அணி ஏன் கப்பா செல்ல விரும்பும்? அந்த மைதானத்தில் யாரும் அவுஸ்திரேலியாவை வென்றது கிடையாது. அவுஸ்திரேலிய அணியும் அங்கு சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி உள்ளது.

அந்த குறிப்பிட்ட மைதானத்தில் அவுஸ்திரேலிய அணியை எந்த ஒரு அணியும் வீழ்த்தியதே இல்லை. இந்த விடயத்தை இந்திய வீரர்கள் நினைக்க வாய்ப்புள்ளது.

மேலும் நீண்ட நாட்களாக பாதுகாப்பு வளையத்தில் இருந்து இந்தியர்கள் சற்று சோர்வடைந்து இருக்கலாம்.



இதனால் போட்டியை எங்கும் மாற்ற முடியாது. அவுஸ்திரேலியா வரும்போதே இங்கு என்ன நடைமுறை இருக்கிறது என்பது அவர்களுக்குத் தெளிவாகத் தெரிந்திருக்கும்.

இங்குள்ள கட்டுப்பாடுகளும் அவர்களுக்கு தெரிந்திருக்கும். இதுதான் நடக்கும் என்று தெரிந்து இந்தியர்கள் அடம் பிடிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (4)

## ஜப்பானின் முன்னணி


# மல்யுத்த வீரருக்கு கொரோனா

ஜப்பானில் முதலிடத்திலுள்ள சுமோ மல்யுத்த வீரர் ஹகுஹோ கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளதாக ஜப்பான் சுமோ நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

மங்கோலியாவில் பிறந்த 35 வயதான சுமோ கிராண்ட் சம்பியனான ஹகுஹோ தனது வாசனை உணர்வை இழந்த பின்னர் கொவிட் -19 பரிசோதனையை நேற்று முன்தினம் மேற்கொண்டுள்ளார். இதன்போதே அவர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமை நேற்று கண்டறியப்பட்டது.

இதனால் எதிர்வரும் 10 ஆம் திகதி ஆரம்பமாகும் கிராண்ட் சுமோ போட்டியில் பங்கேற்பதற்கான வாய்ப்பு ஹகுஹோவுக்கு கை நழுவிப் போயுள்ளது.

ஜப்பானில் தற்போது 2 இலட்சத்துக்கும் அதிகமானோர் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்



டுள்ளதுடன், மூவாயிரத்திற்கு மேற்பட்ட உயிரிழப்புகளும் பதிவாகியுள்ளன.

அதனால் டோக்கியோவிற்கும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கும் அவசரகால நிலையை பிரகடனப்படுத்துவது தொடர்பான அறிவிப்பினை ஜப்பான் பிரதமர் யோஷிஹைட் சுகா நாளை வெளியிடுவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (4)

# மருதனார்மடம் சந்தையை திறக்க அனுமதிகோரி தவிசாளருக்கு மகஜர்



(குப்பிழான்)

கொரோனா அசாதாரண சூழ்நிலை காரணமாக கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 13 ஆம் திகதி முதல் பூட்டப்பட்டுள்ள மருதனார்மடம் சந்திக் கடைத் தொகுதிகளை மீளத் திறக்குமாறு வலியுறுத்தியும் கடைத் தொகுதிகள் தொடர்ந்தும் பூட்டப்பட்டுள்ளமையால் தமது வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து மேற்படி கடைத் தொகுதி வர்த்தகர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை வலி.தெற்குப் பிரதேச சபைத் தவிசாளர் கருணாகரன் தர்ஷனைச் சந்தித்துக் கலந்துரையாடியதுடன் மகஜரும் கையளித்தனர்.

குறித்த மகஜரின் பிரதிகள் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர், வலி.தெற்குப் பிரதேச சபையின் சுகாதார அதிகாரி, உள்ளூராட்சி சபைகளின் ஆணையாளர், வலி.தெற்குப் பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரனுக்கும் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் வர்த்தகர்களால் நேற்றைய தினம் அனுப்பிவைக்கப்பட்டது.

மகஜரைப் பெற்றுக் கொண்ட வலி.தெற்குப் பிரதேச சபையின் தவிசாளர் வடமாகாண சுகாதார சேவைப் பணிப்பாளரின் பணிப்பின் பேரிலேயே மருதனார் மடம் சந்திக்கடைத் தொகுதிகள் பூட்டப்பட்டுள்ளதாகவும் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடி இந்த வாரத்துக்குள் கடைகளை மீளத் திறப்பதற்கான அனுமதியைப் பெற்றுத் தருவதாகவும் வாக்குறுதியளித்தார். (5-4-18)

# பொதுவெளியில் போதைப்பொருட்கள் அழிக்கப்படும் - சரத் வீரசேகர

(கொழும்பு)

எதிர்காலத்தில், நாட்டில் கைப்பற்றப்பட்ட பாரிய அளவிலான போதைப்பொருட்களின் மாதிரிகளை தக்கவைத்து பின்னர் கைப்பற்றப்பட்ட அனைத்து போதைப் பொருட்களையும் அழிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

பாராளுமன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை உரையாற்றிய பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, 2015 ஆம் ஆண்டில் கைப்பற்றப்பட்ட 717 கிலோகிராம் போதைப் பொருட்களுடன் ஒப்பிடும்போது 2020 ஆம் ஆண்டில் 2740 கிலோ போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், இலங்கையில் போதைப்பொருள் கடத்தல் குறையவில்லை என சுட்டிக்காட்டிய ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி, கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்கள் தொடர்ந்தும் விநியோகிக்கப்படுவதாக குற்றம் சாட்டினார்.

இந்நிலையில் இதற்கு பதிலளித்த அமைச்சர் சரத் வீரசேகர, நாட்டில் கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்கள் நீதிமன்றங்களில் வழக்கு முடிவடையும் வரை பல ஆண்டுகளாக ஆதாரமாக வைக்கப்படுவதால் இதுபோன்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுவதாக தெரிவித்தார்.

எனவே இவ்வாறான கவலைகளை போக்க, ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் அடிப்படையில், சட்ட நடவடிக்கைகளுக்கு மாதிரிகளை வைத்திருந்த பின்னர் கைப்பற்றப்பட்ட அனைத்து போதைப் பொருட்களையும் அழிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது எனக் கூறினார்.

இந்த விவகாரம் சட்டமா அதிபருடன் கலந்துரையாடப்படும் என்றும் மாதிரிகள் நேரடியாக அரசு ஆய்வாளருக்கு அனுப்பப்படும் என்றும் தெரிவித்த அமைச்சர், அதே நேரத்தில் போதைப் பொருட்கள் அனைத்தும் வெளிப்படையாக அழிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (நி-4)

# சுற்றுலாப் பயணிகள் தனிமைப்படுத்தப்படுவதில்லை பாரிய கொத்தணிகள் உருவாகும் அபாயம்

## எச்சரிக்கிறார் சுதத் சமரவீர



(கொழும்பு)

வெளிநாடுகளிலிருந்து வரும் சுற்றுலாப் பிரயாணிகள் 14 நாட்கள் தனிமைப் படுத்தப்படுவதில்லை. எனவே அவர்கள் சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளைக் கடுமையாக பின்பற்ற வேண்டியது அத்தியாவசியமானதாகும். அவ்வாறில்லை என்றால் வெளிநாட்டவர்களால் உள்நாட்டவர்கள் தொற்றுக்கு உள்ளானால் பாரிய கொத்தணிகள் உருவாகக்கூடும் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவின் பிரதானி விசேட வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

வெளிநாடுகளிலிருந்து வரும் சுற்றுலாப்பிரயாணிகள் 14 நாட்கள் தனிமைப்படுத்தப்பட்டு அதன் நிறைவில் சுற்றுலா செல்லும் முறைமை பின்பற்றப் படவில்லை.

அவ்வாறு செய்வது சாத்தியமற்றது. காரணம் தனிமைப் படுத்தல் காலத்தில் தான் அவர்கள் சுற்றுலா செல்கின்றனர். எனவே சுகாதாரப் பாதுகாப்பு விதிமுறைகளை பின்பற்ற வேண்டியது அத்தியாவசியமானதாகும்.

காரணம் சுற்றுலாத்துறையினர் மூலம் உள்நாட்டிலுள்ளோர் ஏதேனுமொரு வகையில் தொற்றுக்குள்ளானால் அதனால் பாரிய கொத்தணிகள் உருவாகக்கூடிய வாய்ப்புள்ளது. அத்தோடு இந்த வைரஸின் வெவ்வேறு வகைகள் நாட்டில் உருவாகக் கூடிய வாய்ப்பும் இதன் மூலம் ஏற்படும்.

எனவே சுற்றுலாத்துறையுடன் தொடர்புடைய ஹோட்டல் ஊழியர்கள் , வாகன சாரதிகள் உள்ளிட்டோர் குறித்த காலப் பகுதிகளில் அவரவர் தொழில் புரியும் இடங்களில் மாத்திரமே இருக்க வேண்டும்.

முதலாம் கட்ட சுற்றுலா பயணிகள் நாட்டிலிருந்து சென்றதன் பின்னர் குறித்த சேவையாளர்கள் 14 நாட்கள் சுய தனிமைப்படுத்தலில் ஈடுபட வேண்டும். அதன் பின்னரே அவர்கள்சமூகத்துடன் இணைய முடியும்.

நாட்டில் தற்போது தொற்றாளர்களின் எண்ணிக்கையில் சிறிதளவு வீழ்ச்சி காணப்பட்டாலும் நாளாந்தம் நூற்றுக்கணக்கான தொற்றாளர்கள் இனாங் காணப்படுகின்றனர் என அவர் தெரிவித்தார். (நி-4)

# கோவக்ஸ் தடுப்பூசியைப்பெற அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

கோவக்ஸ் கொரோனாத் தடுப்பூசியைப் பெறுவதற்காக உற்பத்தியாளர்களுடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் திட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழுங்கியுள்ளது.

சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியராச்சி முன்வைத்த குறித்த யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழுங்கியுள்ளது.

இலங்கையும் இக் கோவக்ஸ் செயன்முறையில் உள்வாங்கப்பட்டுள்ளதுடன், கோவக்ஸ் வசதிகள் மூலம் கொவிட்-19 தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதற்காக உத்தியோகபூர்வ அபிவிருத்தி ஒத்துழைப்புக்கான தகைமையை எமது நாடு கொண்டுள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் உள்ளடங்கலாக, GAVI நிறுவனம் மூலம் உறுதிப்படுத்தியுள்ளது.

குறித்த தடுப்பூசி வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக இரண்டு படிமுறைகளின் கீழ் விண்ணப்பங்களை கோருமாறு நாடுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், இலக்குக் குழு மற்றும் தடுப்பூசியைக் களஞ்சியப்படுத்தும் இயலளவு தொடர்பாக தொழில்நுட்பத் தகவல்கள் உள்ளடங்கிய தடுப்பூசி விண்ணப்பத்தின் முதலாம் மற்றும் A பகுதி 2020 டிசெம்பர் மாதம் 7 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டியிருந்ததுடன், இலங்கை குறித்த விண்ணப்பத்தை உரிய நேரத்தில் சமர்ப்பித்துள்ளது. (நி-4)

# நில அதிர்வால் நீர்த்தேக்கத்திற்கு பாரிய அளவில் பாதிப்பில்லை

## சுற்றாடல் துறை அமைச்சர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

கண்டி - திகன பகுதியில் அண்மைக்காலங்களில் ஏற்பட்ட நில அதிர்வுகளினால் விக்டோரியா நீர்த்தேக்கத்திற்கு பாரியளவில் பாதிப்புகள் ஏற்படுவதற்கான வாய்ப்பில்லை என சுற்றாடல் துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்,

அண்மைக் காலங்களில் குறித்த பகுதியில் ஏற்பட்ட நில அதிர்வு குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை அமைச்சரிடம் நேற்று செவ்வாய்க்கிழமை கையளிக்கப்பட்டது.

இந்நிலையில் நிபுணர்கள் குழுவின் அறிக்கை குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், குறித்த பகுதிகளில் 2 ரிக்டர் அளவுக்கும் குறைவாகவே நில அதிர்வுகள் பதிவாகியுள்ளதாக நிபுணர்கள் குழுவினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாக கூறினார்.

நீர்த்தேக்கத்தில் நீர் நிரம்புகின்ற சந்தர்ப்பத்தில் இவ்வாறான அதிர்வுகள் இயற்கையாக உருவாகுவதாகவும் எனினும், விக்டோரியா நீர்த்தேக்கத்திலிருந்து 100 மீற்றர் தூரத்தில் முன்னெடுக்கப்படும் சுண்ணாம்பு அகழ்வு நடவடிக்கைக்கு தடை விதிக்கப்பட வேண்டும் எனவும் நிபுணர்கள் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், நிபுணர்கள் குழுவின் அறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு, புவிச்சரிதவியல் மற்றும் அளவை சுரங்கப் பணியகத்திற்கு அமைச்சர் மகிந்த அமரவீர அறிவுறுத்தல் விடுத்துள்ளார். (நி-4)

# ஆப்கானுடனான உறவை வலுப்படுத்த திட்டம்

(கொழும்பு)

ஆப்கானிஸ்தானுடனான இலங்கையின் உறவை வலுப்படுத்துவதற்கான திட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழுங்கியுள்ளதாக அரசாங்கம் நேற்று தெரிவித்தது.

இரு நாட்டுக்கும் இடையில் அரசியல் ஆலோசனை பொறிமுறையை நிறுவுவது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் திட்டத்திற்கே அங்கீகாரம் வழுங்கப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன் பிரகாரம், அரசியல், பாதுகாப்பு, பொருளாதார, கலாசார, கல்வி, சுகாதாரம், சமூக, தனிநபர் உறவுகள், மனித வள மேம்பாட்டுத் துறைகள் மற்றும் பிற துறைகளை உள்ளடக்கிய இருதரப்பு உறவையும் ஒத்துழைப்பையும் வலுப்படுத்தும் நோக்கில் இந்த திட்டம் முன்வைக்கப்பட்டது.

அதன் பிரகாரம் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன குறித்த தீர்மானத்தை அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளார். (நி-4)

# அறக்கொடை விழா



(யாழ்ப்பாணம்)

சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 96 ஆவது பிறந்த நாள் அறக்கொடை விழா நாளை 7 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் தற்போதைய கொரோனா, கால நிலைமையைக் கருத்திற்கொண்டு பிரார்த்தனையுடன் எளிமையாக நடைபெறும் என தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலயத் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தெரிவித்துள்ளார்.(5-4-18)





நல்லூர் றோட்டரி கழகத்தினரால் சாவகச்சேரியில் உள்ள நூற்றுக்கணக்கான தேவையுடைய குடும்பங்களுக்கு நுளம்பு வலை மற்றும் மெத்தை ஆகியன நேற்று முன்தினம் நல்லூர் றோட்டரிக் கழகத் தலைவர் து.ரமணன் தலைமையில் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் இ.சிவமங்கை மற்றும் உறுப்பினர்கள் தர்சன், கஜிதன் ஆகியோர் கலந்துகொண்டனர். (படம்:- சுபேசன்)



ஏழாலை எனும் பெயர் உருவாகக் காரணமான ஏழு ஆலயங்களில் ஒன்றான ஏழாலை புங்கடி சொர்ணாம்பிகை உடனுறை அம்பலவாணேஸ்வரர் ஆலய வருடாந்தத் திருவாசக முற்றோதல் நிகழ்வு பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. (படம்:- ரவிசாந்)



அமரர் நேசதுரை நிலக்சனின் பிறந்தநாள் நினைவாக அவரது நண்பர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரத்ததானம் வழங்கியிருந்தனர். இவ் இரத்ததானம் யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெற்றது. (படம்: சுபேசன்)

# ஏலவிற்பனை

(கரணவாய்)

கரவெட்டி கமநல சேவை நிலையத்தின் பிரிவுக்கு துன்னாலை மத்திய கமக்காரர் அமைப்புப் பிரிவில் தொடர்ச்சியாக பயிர்களை சேதத்தை ஏற்படுத்தி வந்த கட்டாக்காலி மாடுகள் இரண்டு கமநலத் திணைக்களத்தால் பிடிக்கப்பட்டன.

அவற்றை எவரும் உரிமை கோராத நிலையில் அந்த இரண்டு மாடுகளையும் நாளை 7 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு துன்னாலை மத்தி கோவில் கடவை சித்திவிநாயகர் ஆலய முன்றலில் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில் பகிரங்க ஏலம் விடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (5-4-60)

# ஹோமம்

(யாழ்ப்பாணம்)

உலக மக்கள் அனைவருக்கும் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து விடுபடவும் மக்களின் நலன் வேண்டியும் எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 5 மணி முதல் விசேட திரவிய ஹோமமும் மஹா மிருத்யுஞ்ஜ ஹோமமும் கொக்குவில் ஸ்ரீ வீரமா பிடாரி அம்பாள் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச்சேவையில் இடம்பெறுகின்ற ஆலய தரிசனம் நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு நேரலையாக ஒலிபரப்புச் செய்யப்படும் என ஆலய நிர்வாக சபையினர் அறிவித்துள்ளனர். (5)

# யாழ்.மாநகரம் தொடர்ந்தும் தூய்மையாக இருக்க வேண்டும்

## மாநகர முதல்வர்

(நல்லூர்)

யாழ்.மாநகரத்தில் மிக முக்கிய பிரச்சினையாக காணப்படுகின்ற திண்மக்கழிவகற்றல் தொடர்பாக யாழ்.மாநகர சபையின் தூய்மைப் பணியாளர்கள் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் மாநகர முதல்வருக்குமான சந்திப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இச்சந்திப்பில் யாழ்.மாநகரம் தூய்மையானதாக தொடர்ச்சியாக இருக்க வேண்டும். மாநகரத்தில் காணப்படும் கழிப்பறைகள் அனைத்தும் தொடர்ந்தும் சிறந்த முறையில் பாராமரிக்கப்பட வேண்டும் என்று முதல்வர் கேட்டுக் கொண்டார்.

அத்துடன் யாழ்.மாநகரம் முழுவதையும் தூய்மையானதாக வைத்திருப்பதற்கு உங்களால் செய்ய முழுந்த நீங்கள் செய்ய விரும்புகின்ற செயற்றிட்டத்தினை 2 நாட்களுக்குள் தனக்கு சமர்ப்பிக்குமாறு தொழிற்சங்கத்திடம் கேட்டுக் கொண்டார்.

அதனை ஏற்றுக் கொண்ட தொழிற்சங்கம் அச்செயற்றிட்டத்தினைத் தயாரித்து 2 நாட்களில் மாநகர முதல்வரிடம் கையளிப்பதாக உறுதியளித்தது.

மக்களின் மனதைப் புண்படுத்தாமல் அவர்களினைச் சங்கடப்படுத்தாமல் தங்களுடைய பணியாளர்கள் இம் மாநகரத்தில் சேவையாற்ற வேண்டும் என்றும் அதற்கு தொழிற்சங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

இச்சந்திப்பில் தொழிற்சங்க பிரதிநிதிகள் மற்றும் யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணனுடன் மாநகர உறுப்பினர்களான வரதராஜன் பார்த்தீபன், சிவகாந்தன் தனுஜன், செயசீலன் ஆகியோரும் பங்குபற்றியிருந்தனர். (5-4-33)

# ஆதனவரி செலுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட வரியிறுப்பாளர்கள் 2021 ஆம் ஆண்டிற்கான ஆதனவரியினை 2021 ஜனவரி முதலாம் திகதி முதல் 2021 ஜனவரி 31 ஆம் திகதிவரை 10% கழிவுடன் செலுத்த முடியும்.

அதற்கமைய மாநகர வரியிறுப்பாளர்களின் நன்மை கருதி அலுவலக நாட்களிலும் வார இறுதி நாட்களிலும் விடுமுறை தினங்களிலும் (பொங்கல் தினம் தவிர்த்து) காலை 8.30 தொடக்கம் மாலை 3 மணிவரை ஆதனவரியைச் செலுத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என யாழ்.மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணன் அறிவித்துள்ளார். (5)

# மத நம்பிக்கைகளை அவமதிக்கக் கூடாது



(சாவகச்சேரி)

கொரோனாவைக் காரணம் காட்டி ஒவ்வொருவரும் அவரவர் மதம் மீது வைத்துள்ள நம்பிக்கைகளை அவமதிக்கக் கூடாது என சாவகச்சேரி பிரதேசசபைத் தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் சாவகச்சேரி பிரதேசசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முஸ்லிம் உறவுகள் இறந்த ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்ய முடியாத சூழ்நிலை காணப்படுகிறது. ஒவ்வொருவரும் அவரவர் மதம் மீது வைத்திருக்கும் நம்பிக்கையை பாதுகாக்க வேண்டும்.

ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்வது தொடர்பில் அரசு சரியான முடிவினை எடுக்க வேண்டுமென மேலும் அவர் தெரிவித்தார். (5-4-30)

# நிவாரணத்திற்கு நிதி சேகரிக்கும் ஏமாற்றுப் பேர்வழிகள்

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கிராமங்களில் சிலர் ஏமாற்றுவழியில் பணம் சம்பாதித்து வருகின்றனர்.

பல்சர் மோட்டார் சைக்கிளில் ஹெல்மேட் அணிந்த இருவர் வெள்ள நிவாரண நிதிக்காக உங்களால் இயன்ற பண உதவி செய்யுமாறு பொதுமக்களிடம் பணம் பெற்று வருவதாக கிராம உத்தியோகத்தருடாக பிரதேச செயலகத்திற்கு தெரியப்படுத்தப்பட்டது.

அதனையடுத்து பொலிஸாருக்கும் தகவல் வழங்கப்பட்டது.

இவ்வாறு நிவாரணத்திற்கு எனப் பணம் சேகரிப்பவர்கள் கிராமத்திற்கு வந்தால் உடனடியாக பொலிஸாருக்கோ அல்லது கிராம உத்தியோகத்தருக்கோ அறிவிக்குமாறு பிரதேச செயலாளர் ஈ.தயாரூபன் பொது மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்நிலையில் நேற்று வெள்ள நிவாரணத்திற்காகப் பணம் கேட்ட நபரை பொதுமக்கள் மடக்கிப் பிடித்து கிராம உத்தியோகத்திடம் ஒப்படைத்தனர்.

சம்பவ இடத்திற்கு வந்த பிரதேச செயலாளர் குறித்த நபரைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தார். (5-4-60)

# ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலிருந்து வெளியேறியோரை சேவையில் இணைக்க தீர்மானம்

(கொழும்பு)

ஆசிரியர் பயிற்சி கல்லூரிகளிலிருந்து வெளியேறிய 3772 பேரை சேவைக்கு இணைத்துக் கொள்ளும் செயற்பாடு எதிர்வரும் 2 வாரங்களுக்குள் முன்னெடுக்கப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

ஆசிரியர் சேவைக்கு இணைத்துக் கொள்பவர்களுக்கான நியமனக் கடிதங்களை அவர்களின் வீடுகளுக்கே அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் பீ.கே.எஸ். சுபோதிகா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 11 ஆம் திகதி பாடசாலை கல்வி செயற்பாடுகள் ஆரம்பமாவதற்கு முன்னர், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் டிப்ளோமா கற்கை நெறிகளை பூர்த்தி செய்தவர்களுக்கான நியமன கடிதங்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக அவர் கூறினார்.

புதிய நியமனங்கள் வழங்கப்படும் ஆசிரியர்களில் 1000 பேர் தேசிய பாடசாலைகளுக்கு நியமிக்கபபடவுள்ளதுடன், ஏனைய அனைவரும் மாகாண பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் மற்றும் இறுதி ஆண்டு பரீட்சையில் பெற்றுக் கொள்ளப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் இந்த ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. (நி-4)



அப்புத்தளை நகரின் புதிய மேயர் உபுல் திஸாநாயக்க, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பிரதமரின் விஜேராமவிலுள்ள உத்தியோகப்பூர்வ இல்லத்தில் வைத்து நேற்று பதவியேற்றார்.

## பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

**பதிவு இலக்கம் :PA52-18.03.1972**

**வெளிவாரியாக விண்ணப்பம் கோரல்**

## பதவி குறியீட்டு இல : கணனிப் பக்க உருவாக்குநர் 322/15

சம்பள அளவுத் திட்டம் : 15545-130X10-140X10-18245.00
(04/2018 ற்கு அமைய)

(கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இதர படிகளும் வழங்கப்படும்).

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் : க.பொ.த.சா.தர பரீட்சையில் சிங்களம் / தமிழ் மொழி மற்றும் கணிதம் / எண்கணிதம் உள்ளடங்கிய 06 பாடங்களில் சித்தியுடன் அரச அல்லது அங்கீகரிக்கப்பட்ட கற்கை நிறுவனத்தில் 03 மாதங்களுக்கு குறையாத முழுநேர MS OFFICE அல்லது அதை ஒத்த கணனி பாடநெறி ஒன்றை பூர்த்தி செய்தமைக்கான தகைமை சான்றிதழ் அத்துடன் ஏதாவது ஒரு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் ஓராண்டுக்குக் குறையாத செயல் அனுபவம்.

**பொதுவான நிபந்தனைகள்**

1. சங்க எல்லைப்பரப்பினுள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பங்கள் முழுப்பெயர்,
2. முகவரி, தே.அ.அட்டை இல, பிறந்த திகதி, தகைமைகள் , அனுபவம் என்பன உள்ளடங்கலாக சுயமாகத் தயாரிக்கப்பட்டு பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ் பிரதிகளுடன் அனுப்பி வைத்தல் வேண்டும்.
3. விண்ணப்பங்களை ஏற்கவோ நிராகரிக்கவோ நெறியாளர் குழுவுக்கு உரிமை உண்டு.
4. விண்ணப்பங்கள் **"தலைவர் பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் கண்டி வீதி, பளை"** எனும் முகவரிக்கு எதிர்வரும் 18.01.2021 ஆம் திகதிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக பதித் தபாலில் அல்லது நேரில் ஒப்படைத்து உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.
5. தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் **"கணனி பக்க உருவாக்குநர் பதவி விண்ணப்பம்"** எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

(C-1098)

**(க.இராசதுரை)**
**தலைவர்**
**பளை ப.தெ.வ.அ.கூ.சங்கம்**
**கண்டி வீதி, பளை.**
**06.01.2021**

## சுற்றுலாப் பயணிகளுக்காக திறக்கப்படும் விமான நிலையம்

(கொழும்பு)

சுற்றுலாப் பயணிக்காக எதிர்வரும் 23 ஆம் திகதி தொடக்கம் விமான நிலையங்களை முழுமையாக திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். நேற்று கொழும்பில் இடம் பெற்ற ஊடக சந்திப்பிலேயே அமைச்சர் இதனை குறிப்பிட்டார். (நி-4)




# கனவு இல்லம்

**46 லட்சம்**

3 அறைகள், குளியலறை, கூரை,
கொங்கிறீட் பிளாட், வரவேற்பறை, சமையலறை
உங்கள் காணியில் கட்டிக்கொள்ள



மேலதிக தகவல்களுக்கு
075 093 9464, 076 371 3128

(5183)


## பகிரங்க ஏல அறிவித்தல் - 2021
## கரைச்சி பிரதேச சபை கிளிநொச்சி.

கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள சந்தைகள், இறைச்சிக்கடைகள் உள்ளிட்ட குத்தகை நிலையங்களை 2021.01.15- 2021.12.31 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான பகிரங்க ஏலம் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக நடைபெறும்.

பகிரங்க ஏலம் நடைபெறும் திகதி, நேரம் :- 2021.01.12 காலை 10.30 மணி

பகிரங்க ஏலம் நடைபெறும் இடம் :- கரைச்சி பிரதேச சபை, தலைமை அலுவலகம், கிளிநொச்சி.

**பகிரங்க ஏலம் விடப்படும் குத்தகை நிலையங்கள்**

| இல | குத்தகை நிலையம் | பகிரங்க ஏல இழிவுத் தொகை |
|---|---|---|
| 1 | கிளிநொச்சி சந்தை தராசு கொட்டகை கருவாடு, முட்டை | 305,414.55 |
| 2 | கிளிநொச்சி சந்தை புதிய பொதுமலசலகூடம் | 79,536.49 |
| 3 | பரந்தன் சந்தியில் இருந்து இரணைமடுச் சந்தி வரையான A9 வீதி வாகன தரிப்பிடம் | 158,379.54 |
| 4 | வட்டக்கச்சி சந்தைதொகுதி | 190,967.30 |
| 5 | வட்டக்கச்சி கோழி இறைச்சிக்கடை | 318,710.70 |
| 6 | இராமநாதபுரம் கோழி இறைச்சிக்கடை | 258,835.50 |
| 7 | இரணைமடு சந்தை தொகுதி | 34,989.57 |
| 8 | D10 உருத்திரபுரம் சந்தை தொகுதி | 15,903.78 |
| 9 | தருமபுரம் சந்தை தொகுதி | 56,438.05 |
| 10 | கண்டாவளை மாட்டிறைச்சிக்கடை | 31,842.15 |
| 11 | முரசுமோட்டை கோழி இறைச்சிக்கடை | 50,020.74 |

**நிபந்தனைகள்**

1. பகிரங்க ஏலத்தில் பங்குபற்றுபவர்கள் 2021.01.12 ஆம் திகதி பி.ப.10.00 மணிக்கு முன்னர் ரூபா.500.00 செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ள வேண்டும். பற்றுச்சீட்டினை பெற்றுக்கொண்டவர்கள் மாத்திரமே பகிரங்க ஏலத்தில் பங்குபற்ற முடியும்.
2. சித்தியடையும் ஏலகாரர் கேள்வித்தொகையின் மூன்றில் ஒரு பகுதி தொகையினை அன்றைய தினமே உடனடியாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும். குறித்த கேள்விகாரர் ஒப்பந்தத்திற்கு அமைவாக குத்தகை நிலையத்தை நடாத்தினால் குறித்த வைப்புத் தொகை புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களின் குத்தகை ஒப்பந்தமாக மாற்றம் செய்யப்படும்.
3. 2020.11.21 ஆம் திகதி பத்திரிகையில் வெளியிடப்பட்ட கேள்வி அறிவித்தல் நிபந்தனைகளும் கருத்திற்கொள்ளப்படும்.

(C-1099)

**தவிசாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி.**


# ரட்ணாஸ் வைண்டிங் வேக்ஸ்

**வேண்டுகோள்**

எமது அன்பார்ந்த வாடிக்கையாளர்களே! தங்களால் எமக்கு வழங்கப்பட்ட திருத்த வேலைகளுக்காக எமக்கு தரப்பட்ட உபகரணங்களை தவிர்க்க முடியாத காரணங்களினால் ஒரு வாரத்திற்குள் பெற்றுக் கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம். அதற்குப் பிறகு வரும் பொறுப்புக்களுக்கு நாங்கள் பொறுப்பாளி இல்லை என்பதனை மன வருத்தத்துடன் அறியத் தருகின்றோம்.

**ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**
**அ.ஜெகதீஸ்வரன்**
**021 222 5334**

(5192)

## ஐயன்கன்குளத்தில் பரீட்சை நிலையம் அமைக்குமாறு கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு ஐயன்கன் குளம் மகாவித்தியாலயத்தினை எதிர்வரும் மார்ச் மாதத்தில் க.பொ.த.சாதாரணப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான பரீட்சை நிலையமாக மாற்றுமாறு துணுக்காய் பிரதேச சபை உறுப்பினர் சற்குணநாதன் சுயன்சன் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐயன்கன்குளம், புத்துவெட்டுவான், பழைய முறிகண்டி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள் கடந்த காலங்களில் 20 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள மல்லாவி மத்திய கல்லூரிக்குச் சென்றே பரீட்சைக்குத் தோற்றி வந்தனர்.

போக்குவரத்து வசதி இல்லாத இக்கிராம மாணவர்கள் பலத்த நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே பரீட்சைகளுக்குத் தோற்றி வந்தனர். இந்நிலையில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த. சாதாரணப் பரீட்சை நிலையத்தை ஐயன்கன்குளம் மகா வித்தியாலயத்தில் அமைக்குமாறும் இதற்கான ஏற்பாடுகளை துணுக்காய் கல்வி வலயம் மேற்கொள்ள வேண்டும் எனவும் பிரதேச சபை உறுப்பினர் கோரிக்கை விடுத்துள்ளார். (5-4-350)

## இயக்கச்சியில் விபத்து; இருவர் காயம்

(பரந்தன்)

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இயக்கச்சி பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.


இவ் விபத்துப் பற்றி தெரிய வருவதாவது.

முல்லைத்தீவில் இருந்து யாழ்.நோக்கி பயணித்த தனியார் பேருந்து மற்றொரு வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்ட போது எதிரே வந்த ஹன்டர் வாகனத்துடன் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ் விபத்தில் வாகனங்களை செலுத்திய சாரதிகள் இருவரும் காயமடைந்த நிலையில் பளை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5-4-312-316)

## உத்தியோகத்தர்களுக்கான வீடுகளில் பற்றைகளும் புற்றுக்களும்



(அக்கராயன்)

முல்லைத்தீவு பனிக்கன் குளத்தில் அரச உத்தியோகத்தர்களுக்கென அமைக்கப்பட்ட 50 வீடுகளில் எந்தவொரு அரச உத்தியோகத்தரும் குடியேறாததன் காரணமாக வீடுகளில் புற்றுகள் ,பற்றைகள் வளர்ந்து காணப்படுகின்றன என புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் உறுப்பினர் மு.முகுந்தகஜன் தெரிவித்துள்ளார்.


கடந்த 8 ஆண்டுகளுக்கு மேலாக குறித்த வீடுகளில் அரச உத்தியோகத்தர்கள் குடியேறாததன் காரணமாக குறித்த வீடுகளை வீடுகள் அற்ற குடும்பங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஒட்டுசுட்டான் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலும் முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

வீடுகள் அற்ற குடும்பங்கள் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் பதிவுகளை மேற்கொள்கின்ற போது பனிக்கன் குளத்திலுள்ள குறித்த வீடுகளில் குடியேறலாம் என ஒட்டுசுட்டான் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.

பல குடும்பங்கள் பிரதேச செயலகத்தில் பதிவுகளை மேற்கொண்ட போதிலும் இதுவரை எந்தக்குடும்பமும் குடியேறுவதற்கான நடவடிக்கைகளை பிரதேச செயலகம் மேற்கொள்ளவில்லை. ஆனால் 50 வீடுகளும் அழிந்து கொண்டிருக்கின்றன.

இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் குறித்த வீடுகள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுத்து வீடுகள் அற்ற குடும்பங்களுக்கு குறித்த வீடுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச சபை உறுப்பினர் மு.முகுந்தகஜன் கோரிக்கை விடுத்துள்ளார். (5-4-350)

## ஒரே இரவில் 4 கோவில்களில் திருடர்கள் கைவரிசை



(நெளுக்குளம்)

வவுனியா கந்தபுரம், தவசிகுளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு நான்கு கோவில்களில் திருட்டுச்சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

நேற்றையதினம் இரவு குறித்த கோவில்களிற்குள் உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த கதவினை உடைத்து உண்டியல்களை திருடியதுடன், ஒலிபெருக்கி சாதனங்களையும் திருடிச் சென்றுள்ளனர்.

கந்தபுர்ம் பிள்ளையார் கோவில் மற்றும் அம்மன் கோவில், பொன்னாவரசங்குளம் பிள்ளையார்கோவில், தவசிகுளம் வைரவர் கோவில், ஆகிய கோவில்களிலேயே குறித்த திருட்டுச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

சில கோவில்களில் உண்டியல்களை உடைத்து பணத்தினை மாத்திரம் எடுத்துச் சென்றுள்ளதுடன், உண்டியல்களை ஆலய வளாகத்திலேயே வீசிவிட்டு சென்றுள்ளனர்.

இச்சம்பவங்கள் தொடர்பாக வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர்(5-4-250-299)

## 4078 பேர் தனிமைப்படுத்தலில் பாதுகாப்பு நடவடிக்கை தீவிரம்

(நெளுக்குளம்)

வவுனியா பட்டாணிச்சூரில் வசித்த இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதைத் தொடர்ந்து குறித்த தொற்றுக்குள்ளான பகுதிகள் தற்காலிகமாக நேற்று முன்தினம் முடக்கம் செய்யப்பட்டுள்ளதுடன் 938 குடும்பங்களை சேர்ந்த 4078 பேர் தனிமைப் படுத் தப் பட்டு பாதுகாப்பு நடவடிக்கைகளும் தீவிரப் படுத் தப் பட்டுள்ளன.

இந்நிலையில் குறித்த நபர்களுடன் தொடர்புடைய குடும்ப உறுப்பினர்கள் உள்ளவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களுக்கான பி.சி.ஆர் பரிசோதனைகள் நேற்று இடம் பெற்றன.

குறித்த நபர்களுக்கு எவ்வாறு தொற்று ஏற்பட்டுள்ளது என்பது தொடர்பாக விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன.

பொலிஸார் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தொற்றாளியுடன் தொடர்புகளை மேற்கொண்ட நபர்களை அடையாளம் காணும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (5-299)

## பிரதேச வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியரை நியமிக்க

## பொது அமைப்புக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கின் நட்டாங்கண்டல் பிரதேச வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியரை நியமிக்குமாறு அப்பகுதி பொது அமைப்புகள் முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரப்பணிப்பாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளன.

ஐயன்கன்குளம் வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியராக நியமிக்கப்பட்டவரே நட்டாங்கண்டல் பிரதேச வைத்தியசாலையில் தினமும் பகுதி நேரமாக கடமையில் ஈடுபடுகின்றார்.

வைத்தியர் இல்லாத நேரங்களில் நோயாளர்கள் மல்லாவி மாங்குளம் ஆதார வைத்தியசாலைகளுக்கு செல்ல வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

நட்டாங்கண்டல் வைத்திய சாலையில் தாதிய உத்தியோகத்தர்கள் இல்லை எனவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய கிராமங்களைக் கொண்டமாந்தை கிழக்கு பிரதேச செயலகப் பிரிவில் நட்டாங்கண்டல் வைத்தியசாலையினை நம்பி 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் உள்ளன.

மாந்தை கிழக்கு மக்கள் எதிர்கொள்ளும் சுகாதார நெருக்கடிகளுக்கு முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் தீர்வுகள் வழங்க வேண்டும் எனவும் பொது அமைப்புகள் வலியுறுத்தி உள்ளன. (5-4-350)

## மத்தியஸ்தர்சபைச் செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பம்

(குருமன்காடு)

வவுனியா மாவட்ட விசேட காணி மத்தியஸ்தர் சபையின் செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அதன் தவிசாளர் இ.நவரட்ணம்தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் உள்ள காணி பிணக்குகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் கலந்துரையாடி தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் முகமாக விசேட காணி மத்திய ஸ்தசபை செயற்பட்டு வந்தது.

நாட்டில் ஏற்பட்ட கொவிட் -19 தொற்றுக் காரணமாக விசேட காணி மத்தியஸ்தர் சபையின் செயற்பாடுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தன.

இந்நிலையில் எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை முதல் வவுனியா மாவட்ட விசேட காணி மத்தியஸ்தர் சபையின் செயற்பாடுகள் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி நடைபெறவுள்ளது என மத்தியஸ்தர் சபைத் தவிசாளர் அறிவித்துள்ளார்.

அந்தவகையில் வவுனியா விசேட காணி மத்தியஸ்தர் சபையின் அமர்வுகள் எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிமுதல் 1 மணிவரை செட்டிகுளம் பிரதேச செயலகத்திலும், 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் ஒரு மணிவரை வவுனியா, குடியிருப்பு இலங்கை திருச்சபை தமிழ் கலவன் பாடசாலையிலும் , 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை புளியங்குளம் இராமனூர் தனிநாயகம் வித்தியாலயத்திலும் நடைபெறும்.அதனைத் தொடர்ந்து வழமை போல் விசேட காணி மத்தியஸ்தர் சபையின் செயற் பாடுகள் இடம்பெறும் என அவர் மேலும் தெரிவித்தார். (5-4-250)

# இராசிபலன்

06.01.2021
மார்கழி 22, புதன்கிழமை
அட்டமி பின்னிரவு 1.05 மணிவரை
அத்தம் பிற்பகல் 4.28 மணிவரை
சுபநேரம் 5.01-6.31 மணிவரை
இராகுகாலம் 12.31-2.01 மணிவரை
சந்திராஷ்டமம் - பூரட்டாதி, உத்திரட்டாதி

வளவன்


மேஷம்

நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், கௌரவமான நாள்.


ரிஷபம்

அரசு வழியில் அனுகூலமுண்டு, அருமையான நாள், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


மிதுனம்

தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும். இயல்பான வாழ்க்கையில இன்பங்கள் கூடும் நாள்.


கடகம்

வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


சிம்மம்

குடும்பத்தில் குதூகலம் கூடும், ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பேச்சில் இனிமை தென்படும், சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.


கன்னி

கோரிக்கைகள் நிறைவேற வழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், சிந்தனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.


துலாம்

தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், புண்ணிய காரியங்களுக்காக சிறிது செலவு செய்து மகிழ்வீர்கள், ஒரு சில வேலைகளுக்காக சற்று அலைச்சல்கள் ஏற்படலாம்.


விருச்சிகம்

வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், விருந்தினர் வருகையுண்டு, மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.


தனுசு

செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், தூரதேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம்.


மகரம்

புதிய திட்டங்கள் எளிதில் கைகூடும், உடல் நலனில் இருந்த பாதிப்புகள் குறையும், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பயணங்கள் கைகூடும்.


கும்பம்

மற்றவர்களிடம் பேசும் போது நிதானம் தேவை, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், விரயங்கள் கூடும், கோபத்தைக் குறைத்து கொள்வது நல்லது.


மீனம்

ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணைவர், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

தன்னையே கொல்லும் சினம்

# நிர்ணய விலையில் நெல் கொள்வனவுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியது

**(கொழும்பு) நெல்விலைச் சரிவைக் கட்டுப்படுத்தும் நோக்கில், நிர்ணய விலையில் நெல்லை கொள்வனவு செய்ய, நெல்சந்தைப்படுத்தல் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.**

இதற்காக, விவசாயத் துறை அமைச்சர் மகிந்தானந்த அலுத்கமகேவினால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஒருகிலோ கிராம் தரமான நாட்டரிசி நெல்லை 50 ரூபாவுக்கும், ஏனையவற்றை 44 ரூபாவுக்கும் கொள்வனவு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஒரு கிலோ கிராம் தரமான சம்பா அரிசி நெல்லை 52 ரூபாவிற்கும், சம்பா அரிசியின் ஏனையவற்றை 46 ரூபாவிற்கும் கொள்வனவு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, உரமானியம் பெறும் சிறிய மற்றும் பாரிய நீர்ப்பாசன விவசாயிகளிடம் இருந்தும், நெல்லை கொள்வனவு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஒன்று முதல் 1.5 ஹெக்டேயர் பரப்பளவில், நெற்செய்கையை மேற்கொண்ட விவசாயிகளிடமிருந்து ஆயிரம் கிலோ கிராம் நெல்லை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



அத்துடன், 1.5 ஹெக்டேயர் பரப்பளவுக்கு மேலதிகமாக நெற்செய்கையை மேற்கொண்ட விவசாயிகளிடமிருந்து, ஆயிரத்து 500 கிலோகிராம் நெல்லையும், கொள்வனவு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# உக்ரேய்ன் நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் செல்லுமிடங்கள் எமக்கு அறிவிக்கப்படவில்லை


## இலங்கை சுற்றுலா சபை தெரிவிப்பு

(கொழும்பு)

உக்ரேய்னிலிருந்து வந்த சுற்றுலாப்பயணிகளில் ஒரு பிரிவினர் மிரிஸ்ஸ மற்றும் யாலவிற்குச் சென்றமை தொடர்பான விபரங்கள் எமக்கு முன்கூட்டியே வழங்கப்படவில்லை. ஊடகங்களில் வெளியான செய்திகளின் ஊடாகவே அதனை அறிந்துகொண்டோம் என இலங்கை சுற்றுலா சபை அறிவித்திருக்கிறது.

இது குறித்து விளக்கமளிக்கும் வகையில் இலங்கை சுற்றுலா சபையின் தலைவர் கிமர்லி பெர்னாண்டோவினால் சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மற்றும் அமைச்சின் செயலாளர் எஸ். ஹெட்டியாராச்சி ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

சுற்றுலாப்பயணத்தை ஏற்பாடு செய்வோருக்கும் கொவிட் - 19 தொடர்பான விசேட செயலணிக்கும் இடையில் இடம்பெற்ற கூட்டத்தின் போது, சுற்றுலாப்பயணிகளை அழைத்துச் செல்லப்படும் இடங்கள் பற்றிய தகவல்களை முன்கூட்டியே இலங்கை சுற்றுலா சபைக்கு வழங்கவேண்டும் என்ற யோசனைக்கு இணக்கப்பாடு எட்டப்பட்டது.



அதுமாத்திரமன்றி அவசிய மேற்படும் பட்சத்தில் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக இதில் தொடர்புபடும் சாரதிகள் மற்றும் சுற்றுலாப்பயண வழிகாட்டிகளின் விபரங்களையும் அந்தந்த பிராந்திய சுகாதார அதிகாரிகளிடம் வழங்கவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

சுற்றுலாப் பயணிகளை அழைத்துச்செல்லும் இடங்கள் மற்றும் அது குறித்த விபரங்களை முன்கூட்டியே எமக்கு அறியத்தருவதன் ஊடாகவே நாம் சுகாதார அமைச்சிற்கும் கொவிட் - 19 தொடர்பான விசேட செயலணிக்கும் அவசியமான தகவல்களை வழங்க முடியும் என்று சுற்றுலா சபை தெரிவித்தது. (நி-4)

# பாராளுமன்ற உறுப்பினராக அத்துரலிய பதவிப்பிரமாணம்

(கொழும்பு)

எங்கள் மக்கள் சக்தி கட்சியில் இருந்து தேசிய பட்டியலில் பாராளுமன்றிற்கு தெரிவு செய்யப்பட்ட அத்துரலிய ரதன தேரர் பாராளுமன்ற உறுப்பினராக நேற்று பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன முன்னிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை அவர் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட எங்கள் மக்கள் சக்தி கட்சிக்கு தேசியப் பட்டியல் ஆசனமொன்று கிடைத்திருந்த நிலையில், அந்த ஆசனத்துக்கான உறுப்பினரைத் தெரிவுசெய்வதில் தொடர்ந்து இழுபறிநிலை நீடித்தது.

அதன் பின்னர் எங்கள் மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு அத்துரலிய ரதன தேரர் பெயரிடப்பட்டுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அண்மையில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# 9 மாதங்களின் பின் பாடசாலைகள் திறப்பு



(நைரோபி)

கொரோனா வைரஸ் எதிரொலியாக கென்யாவில் கடந்த ஆண்டு மார்ச் மாதம் முதல் பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன.

உலகையே உலுக்கிவரும் கொரோனா வைரஸ் ஆபிரிக்க நாடுகளிலும் பரவியுள்ளது. ஆனால், பிற வளர்ந்த நாடுகளுடன் ஒப்பிடும்போது ஆபிரிக்க நாடுகளில் கொரோனா வைரஸ் பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

அந்நாட்டில் 2020 மார்ச் மாதம் முதலே பாடசாலைகள் காலவரையறையின்றி மூடப்பட்டன. அந்நாட்டில் இதுவரை மொத்தமாக 97 ஆயிரம் பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கொரோனாவுக்கு இதுவரை 1,600 பேர் உயிரிழந்துள்ளனர். தற்போது கென்யாவில்கொரோனாவைரஸ் கட்டுக்குள் வந்துள்ளது.

இந்நிலையில், வைரஸ் கட்டுக்குள் வந்ததையடுத்து அந்நாட்டில் உள்ள அனைத்து பாடசாலைகளையும் திறக்க அரசு அனுமதி வழங்கியது. இதையடுத்து, 9 மாதங்களுக்கு பிறகு நேற்று முன்தினம் கென்யாவில் பாடசாலைகள் திறக்கப்பட்டன.

பாடசாலைகளுக்கு வரும் மாணவ/மாணவிகள் கட்டாயம் முககவசம் அணிந்துவர வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கொரோனா தடுப்பு நடைமுறையாக வகுப்புகளில்போதிய இடவசதி இல்லையென்றால் பாடசாலைக் கட்டடத்திற்கு உள்ளே மரத்தடி நிழலில் வைத்து வகுப்புகளை நடத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. (நி-4)

# கொடூரமான வைரஸ் உலகைத் தாக்கும்!

## எச்சரிக்கை விடுக்கும் ஆபிரிக்க விஞ்ஞானி

(ஆபிரிக்கா)

**கொரோனா வைரஸை விட புதிய கொடூரமான வைரஸ் உலகைத் தாக்கக் கூடும் என்று ஆபிரிக்க விஞ்ஞானி ஜாக்குவஸ் எச்சரித்துள்ளார்.**

இதுதொடர்பாக அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், உலகம் மிகக் கொடூரமான வைரஸ் தாக்குதலுக்கு உள்ளாகும் என்றும் எக்ஸ் எனப்படும் ஒரு மர்ம நோய் கொரோனா வைவிட மிக வேகமாகப் பரவுவதாகவும் எபோலாவைவிட உயிர்க்கொல்லியாகவும் இருக்கலாம் எனத் தெரிவித்துள்ளார்.

மனித குலம், மிக விரைவில் இன்னும் பல மோசமான வைரஸ் தாக்குதல்களை சந்திக்கக் கூடும் என்றும் மேலும் ஆபிரிக்காவின் மழைக்காடுகளில் இருந்து புதிய வைரஸ்கள் உருவாகி அது உலகம் முழுவதும் பரவும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (நி-4)

### தென்கொரிய கப்பல் கைப்பற்றியது ஈரான்

(டெஹ்ரான்)

ஈரானின் புரட்சிகர காவல் படை (IRGC) வளைகுடா கடற்பரப்பில் தென் கொரிய நாட்டின் கொடியேற்றப்பட்ட ஒரு கப்பலை கைப்பற்றியுள்ளதுடன், அதன் குழுவினரை தடுத்து வைத் துள்ளது.

சவுதி அரேபியாவிலிருந்து ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நோக்கி பயணித்தபோதே தென்கிழக்கில் ஓமான் குடாவையும், தென் மேற்கில் பாரசீகக் குடாவையும் கொண்ட ஹோர்முஸ் நீரிணையில் வைத்து இந்த கப்பல் கைப்பற்றப்பட்டுள்ளது. (நி-4)

# விக்கிலீக்ஸ் நிறுவுநரை நாடுகடத்த நீதிமன்றம் தடை

(லண்டன்)

அமெரிக்காவில் உளவு பார்த்ததாக கைதுசெய்யப்பட்ட விக்கிலீக்ஸ் நிறுவனத்தின் தலைவர் ஜுலியன் அசாஞ்சேவை நாடு கடத்த அனுமதிக்க முடியாது என பிரித்தானிய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவைப் பூர்வீகமாகக்கொண்ட 49 வயதாகும் ஜுலியன் அசாஞ்சே விக்கிலீக்ஸ் இணையத்தளத்தின் நிறுவுநர் தலைவராவார்.

இவர், ஈராக், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் அமெரிக்கா செய்த போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், பிற நாடுகளை உளவு பார்த்தது தொடர்பான இராணுவ ரகசிய ஆவணங்களை 'ஹக்' செய்து விக்கிலீக்ஸ் இணையத்தளத்தில் 2010 ஆம் ஆண்டு வெளியிட்டார். இந்த தகவல்கள் உலகையே அதிர வைத்தன.

இதையடுத்து ஜுலியன் அசாஞ்சே மீது அமெரிக்கா 18 குற்றவியல் வழக்குகளை தொடர்ந்தது. அமெரிக்காவுக்கு எதிராக செயற்படும் உளவாளி என்று அசாஞ்சே மீது குற்றம் சுமத்தியது.

இந்நிலையில் அவர் இங்கிலாந்துக்கு தப்பிச்சென்றார். அங்கு அவர் லண்டனில் உள்ள ஈக்குவடோர் நாட்டு தூதரகத்தில் 2012 ஆம் ஆண்டில் தஞ்சமடைந்தார்.

ஆனாலும், அமெரிக்காவின் அழுத்தம் காரணமாக 2019 ஆம்ஆண்டு ஈக்குவடோர் அரசு அவரை கைவிட்டது.

அதனைத் தொடர்ந்து, 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஈக்குவடோர் தூதரகத்துக்குள்ளே நுழைந்த லண்டன் பொலிஸார் அசாஞ்சேவை அதிரடியாக கைது செய்தனர்.

கைதான ஜுலியன் அசாஞ்சேவை தங்களிடம் ஒப்படைக்கக் கோரி அமெரிக்கா பிரித்தானியாவிடம் கோரிக்கை விடுத்தது.

இந்த வழக்கு விசாரணை நேற்று முன்தினம் நடைபெற்றது. வழக்கை விசாரித்த நீதிபதி வனேசா பிராய்ட்சர், அசாஞ்சே அமெரிக்காவிற்கு நாடு கடத்தப்பட்டால்அவர்தற்கொலை செய்து கொள்வதற்கு வாய்ப்புள்ளது. எனவே அவரை நாடு கடத்துவதற்கு அனுமதிக்க முடியாது என்று உத்தரவிட்டார்.

எனினும் அசாஞ்சேவை நாடு கடத்தக்கூடாது என பிரித்தானிய நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பை எதிர்த்து அமெரிக்கா மேல்முறையீடு செய்யலாம். அதற்கு இன்னும் 15 நாட்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# பறவைக் காய்ச்சலை தடுக்க 36 ஆயிரம் வாத்துகளை கொல்ல திட்டம்



(கேரளா)

கேரளாவில் பரவி வரும் பறவைக் காய்ச்சலைத் தடுக்க 36 ஆயிரம் வாத்துகளை கொல்ல அம்மாநில அரசு தீர்மானித்துள்ளது.

இது குறித்து கேரள அரசு அதிகாரி தெரிவிக்கையில், "வாத்துகளால் மனிதர்களுக்கு பறவைக் காய்ச்சல் பரவுவதை தடுக்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மர்மமான முறையில் பறவைகள் இறக்கும் பகுதிகளுக்கு மக்கள் செல்லத்தடை விதித்துள்ள மாநில அரசுகள் சுற்றுப் பகுதிகளில் உள்ள பறவைகளை அழிக்கவும் உத்தரவு பிறப்பித்துள்ளன. (நி-4)

# இந்தியா மீது பொருளாதாரத் தடை விதிக்கப்படலாம்

## -அமெரிக்கா எச்சரிக்கை-

(வோஷிங்டன்)

ரஷ்யாவிடம் 'எஸ்400' ஏவுகணை தடுப்பு கருவிகளை வாங்கும் விவகாரத்தில் இந்தியா மீது பொருளாதார தடை விதிக்கப்படலாம் என அமெரிக்க பாராளுமன்றம் எச்சரித்துள்ளது.

தரையில் இருந்து வானில் 400 கி.மீ தொலைவில் வரும் எதிரி நாட்டு ஏவுகணைகளை இடைமறித்து தாக்கும் வல்லமை பெற்றது ரஷ்யாவின் 'எஸ்400' ஏவுகணை தடுப்பு அமைப்பு. இந்தியா கடந்த 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ரஷ்யாவிடம் இருந்து 5 'எஸ்400' ஏவுகணை தடுப்பு கருவிகளை வாங்க 5 பில்லியன் அமெரிக்க டொலர் அளவில் ஒப்பந்தம் போட்டது. இந்த ஒப்பந்தத்துக்கு அமெரிக்கா கடும் எதிர்ப்பு தெரிவித்தது. இந்த ஒப்பந்தத்தை இரத்து செய்ய வேண்டும் எனவும் இந்தியாவை அமெரிக்கா வலியுறுத்தியது.

ஆனால் அதை மீறியும் இந்தியா கடந்த ஆண்டு 'எஸ் 400' ஏவுகணை தடுப்பு கருவிகளை வாங்க முதற்கட்டமாக 800 மில்லியன் அமெரிக்க டொலரை ரஷ்யாவிடம் வழங்கியது.

இந்தநிலையில் ரஷ்யாவிடம் 'எஸ்400' ஏவுகணை தடுப்பு கருவிகளை வாங்கும் விவகாரத்தில் இந்தியா மீது பொருளாதார தடை விதிக்கப்படலாம் என அமெரிக்க பாராளுமன்றம் எச்சரித்துள்ளது. (நி-4)



# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## சிறுநீரக கற்களை கரைக்கும் மூலிகைகள்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

சிறுநீரகம் முக்கிய கழிவகற்றும் உறுப்பாகும். பல்வேறு வகையான உப்புக்கள் படிவதாலும் சிறுநீரகம் சீராக தொழிற்பட முடியாது போகின்றது. சிறுநீரக கற்கள் பல்வேறு வகையாக இருந்தாலும் இடுப்பு வலி, அடிவயிறு மட்டும் வலி தாங்கொணா வலியைக் கொடுக்கும். சிலருக்கு வாந்தி, சிறுநீர் சொட்டு சொட்டாக போதல், சிறு நீருடன் இரத்தம் வெளியாதல், நீர்க்கடுப்பு, நீர் எரிச்சல் போன்ற குணங்களில் ஒன்றோ பலவோ ஏற்படலாம்.

• வெறும் வயிற்றில் காலையில் 1 லீற்றர் நீர் அருந்த வேண்டும்.

• 200 மில்லி தண்ணீரில் 5 தேக்கரண்டி பெருஞ்சீரகத்தை ஊறவைத்து அருந்தலாம்.

• வலி தாங்கமுடியாமல் இருந்தால் ஒரு பாத்திரத்தில் நீர் விட்டு பனிக்கட்டிகளை போட்டு இரண்டு கால்களையும் அதனுள் அமிழ்த்தி வைத்திருக்க வேண்டும்.

• சுடுநீர், குளிர்ந்தநீரால் அடிவயிற்றில் மாறி மாறி ஒற்றடம் கொடுக்கவேண்டும். வலிகுறையும்.



வாழைத் தண்டு

• சிறுநீரக கற்கள் தொடர்ந்து இருக்கும் போது உயிரணுக்கள் குறையும். தேகபலமும் குறையும். உடலின் உஷ்ணத்தன்மை அதிகரிக்கும்.

• எலுமிச்சம்பழச்சாறு 30 மில்லி, மிளகு 9, சின்ன வெங்காயம் 1, தேன் 60 மில்லி, 200 மில்லி நீர்

மிளகு பொடித்து வெங்காயத்தை அரிந்து மிளகுடன் சேர்த்து அரைத்து பழச்சாறு, தேனுடன் கலந்து 200 மில்லி நீரில் கலந்து வெறும் வயிற்றில் காலையில் அருந்த வேண்டும். இப்படி தொடர்ந்து 7 நாட்கள் எடுத்துவர வேண்டும்.

• சதைகரைச்சான் மூலிகையும் சிறுநீரக கற்களுக்கு சிறந்தது. இதன் முட்களையும் தோலையும் சீவி உள்ளிருக்கும் ஜெல் போன்ற பகுதியில் தினமும் 10 கிராம் தொடர்ந்து 21 நாட்கள் சாப்பிட்டுவர சிறுநீரக கற்கள் கரையும்.



சதைகரைச்சான்

• இரணகள்ளி, சிறுகண்பிழை/ தேங்காய்ப்பூக்கீரை, சிறுநெருஞ்சில், பூனைமீசை/ சீரகத்துளசி, மூக்கரட்டை செடி, கிழங்கு எல்லாம் சம அளவு எடுத்து 1 லீற்றர் நீர் விட்டு 1/4 லீற்றராக வற்றக்காய்ச்சி வெறும் வயிற்றில் காலையில் தொடர்ச்சியாக 3 நாட்கள் எடுத்துவர சிறுநீரக கற்கள் கரையும்.

• சிறுகண்பீழையை வேருடன் சேகரித்து கழுவி சிறு துண்டுகளாக நறுக்கி கல்வத்தில் இட்டு சர்க்கரை சேர்த்து மைபோல அரைத்து பசுவின் பாலில் சேர்த்து கலந்து சிறுகண்பீழை பால் 50 மில்லி தொடக்கம் 100 மில்லி வரை காலை, மாலை 10-15 நாட்களுக்கு கொடுக்கலாம்.

• சிறுநெருஞ்சில் சம்மூலம் 1 கைப்பிடி, சிறுகண்பீழை 1 கைப்பிடி, முள்ளங்கி 1 மூன்றையும் சேர்த்து குடிநீர் காய்ச்சி 20-100 மில்லி தினமும் காலையில் தொடர்ந்து 7 நாட்கள் எடுத்துவர வேண்டும்.

சிறுநீரக கற்கள் பல்வேறு வடிவங்களில் இருந்தாலும் சிறுகண்பீழையின் பூக்களும் சிறுநெருஞ்சிலின் முட்களும் கற்களின் அமைப்பில் இருப்பது சிறுநீரக கற்களுக்கு அம்மூலிகைகள் சிறந்தன என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

• வாழைத்தண்டுச்சாறு 800 மில்லி - 1 லீற்றர் வரை குடித்துவர கல்லடைப்பு நீங்கும்.

• மாவிலங்கம் பட்டையை இடித்து குடிநீர் காய்ச்சி 50-100 மில்லி தினமும் காலை, மாலை எடுத்து வந்தாலும் சிறுநீரக கற்கள் கரையும்.

• எலுமிச்சம் துளசி, பெருஞ்சீரகம் இரண்டையும் சமஅளவு எடுத்து பொடித்து 4 கிராம் அளவு காலை, மாலை வெந்நீரில் எடுக்க சிறுநீரக கற்கள் கரையும்.

• சப்பாத்திக் கள்ளியை/நாகதாளியை எடுத்துவந்து அதன் மேலுள்ள முள், தோல் இவைகளை நீக்கி பொடியாக நறுக்கி, சிறிதளவு மிளகைத் தூள் செய்து போட்டு நன்றாகக் கலந்து காலை, மாலை 2 தேக்கரண்டி வீதம் சாப்பிட்டு வந்தாலும் சிறுநீரக கற்கள் கரையும்.



மாவிலங்கம் பட்டை



பூனைமீசை

• வேருடன் கூடிய சிறுநெருஞ்சிலை சேகரித்து இடித்து பிழிந்த சாறு 1/2 லீற்றர், நல்ல தூய தேன் 350 மில்லி, சீனி 500 கிராம் ஒன்று சேர்த்து பழைய மண்பானையில் போட்டு அடுப்பேற்றி எரித்து பதத்தில் வடித்து பழசர்பத் போல தினமும் சாப்பிட்டுவந்தால் கல்லடைப்பு நீங்கும்.



சிறுநெருஞ்சில்

• நெருஞ்சில் செடியின் சாறு 4 தேக்கரண்டி அளவு மோரில் கலந்து 7 நாட்கள் தொடர்ந்து குடித்துவந்தாலும் சிறுநீரககற்கள் படிப்படியாக கரையும்.

• சிறுநீரக கற்கள் இருக்கும் போது சிறுநீருடன் இரத்தம் வெளியேறும் நிலை இருக்கும் போது கீழா நெல்லிச்சாறு 60 மில்லி கறந்த பசுவின் பாலில் கலந்து சாப்பிட்டுவர மேற்படி நிலைமை குறையும்.

பொட்டாசியம், சோடியம், பொஸ்பரஸ், குறைவான உணவுகளாக எடுக்க வேண்டும். தக்காளி, கத்தரி, முற்றிய முருங்கைக்காய், கருவாடு போன்றவற்றை இயலுமானவரை தவிர்க்க வேண்டும்.

வெங்காயம், உள்ளி, கோவா, கோழிபிளவர், அன்னாசி, முள்ளங்கி, திராட்சைப்பழம் போன்றவை தாராளமாக எடுக்கலாம்.

சிறுநீரக கற்களுக்கு பீன்ஸ்சும் சிறந்த மூலிகையாகும்.

சிறுநீரக கற்கள் உள்ளவர்கள் முள்ளங்கி சூப், பீன்ஸ் சூப், வாழைத்தண்டு சூப் முதலியன தயாரித்து பயன்படுத்தலாம்.

### முள்ளங்கி சூப்

முள்ளங்கி, இஞ்சி, சின்னச் சீரகம், கொத்தமல்லி இலை, மோர் அளவாக எடுத்து ஒன்று சேர்த்து மிக்ஸியில் அடித்து வடித்து அளவாக உப்பு, தேசிப்புளி சேர்த்து பருகலாம்.

### வாழைத்தண்டு சூப்

சின்ன வெங்காயம், இஞ்சி, உள்ளி, சின்னச்சீரகம், மஞ்சள் பொடி, மிளகு, தக்காளி, கறிவேப்பிலை, நார்நீக்கி வாழைத்தண்டு சிறிதளவு நல்லெண்ணெயில் வதக்க வேண்டியவற்றை வதக்கி வாழைத்தண்டுச் சாறு சேர்த்து கொதிப்பித்து சூப்பாக பருகலாம்.

பூனைமீசை/சீரகத்துளசி இலைகளை சேகரித்து அடித்து ஒரு கைப்பிடி அளவு எடுத்து 1 லீற்றர் நீரில் போட்டு குடிநீர் காய்ச்சி 250 மில்லியாக வற்ற வைத்து காலை, மாலை எடுக்க சிறுநீரக கற்களை கரைத்து சிறுநீரையும் அதிகளவில் வெளியேற்றும்:

சிறுநீரகக்கற்கள் இருப்பவர்கள் மூக்கிரட்டை வேர், வெள்ளைச்சாரணை வேர் இரண்டையும் சமஅளவில் எடுத்து சிதைத்து ஒரு மண்சட்டியில் போட்டு நான்கு பங்கு நீர்விட்டு 1/4 பங்காக சுண்டக்காய்ச்சி 50 மில்லி அளவு காலை, மாலை 21 நாட்கள் தொடர்ந்து எடுத்துவர சிறுநீரக கற்கள் கரையும்.

சித்தமருத்துவத்தின் படி சிறுநீரகக்கற்கள் உருவாக உடலின் அதிகரித்த உஷ்ணம் முக்கிய காரணமாகின்றது. இதன் அடிப்படையிலேயே நீர் முக்கியமாக அருந்துதல் வேண்டும்.

கற்கள் இருப்பவர்கள் இரவில் கண்விழிக்கும்போது கூட நீர் அருந்துதல் சிறந்ததாகும். அத்துடன் முள்ளங்கியை பச்சையாகவே உண்ணலாம்.


வெள்ளை, சிவப்பு முள்ளங்கி இரண்டையும் பயன்படுத்தலாம். Oxalate content கூடிய உணவுகளை கட்டுப்படுத்த வேண்டும். உப்பு கூடுதலாக எடுப்பதை தவிர்க்க வேண்டும். மாதுளம்பழச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு, செவ்விளநீர், பச்சை இளநீர் போன்றவை தாராளமாக எடுக்கலாம்.

# யாழ்.மாவட்ட நுழைவிடங்களில் விரைவில் துரித அன்டிஜன் பரிசோதனை

## அரச அதிபர் மகேசன்

**(கொழும்பு)**

**யாழ்.மாவட்டத்தின் நுழைவிடங்களில் துரித அன்டிஜன் பரிசோதனை விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.**



யாழ்.மாவட்டத்தில் தற்போதைய கொரோனா நிலைமைகள் தொடர்பில் நேற்று கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.மாவட்டத்தில் நேற்று 7 பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி இருக்கின்றார்கள். கடந்த இரண்டு நாட்களாக தொற்று உறுதி செய்யப்படாத நிலையில் நேற்று முன்தினம் பி.சி.ஆர்.பரிசோதனையில் 7 நபர்கள் தொற்றுக்குள்ளாகியுள்ளார்கள். இதில் 6 பேர் ஏற்கனவே மருதனார்மடம் தொற்றாளர்களுடன் தொடர்பினை பேணி தனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

எனினும் பருத்தித்துறையில் மேலும் ஒருவர் சுகயீனம் காரணமாக அனுமதிக்கப்பட்ட நிலையில் அவருக்கு தொற்று இனங்காணப்பட்டுள்ளது. அவரைப் பற்றிய தகவல்கள் சுகாதாரப் பிரிவினரால் சேகரிக்கப்பட்டு வருகின்றது. அதற்குரிய பின்னணியும் ஆராயப்பட்டு வருகின்றது.

எதிர்வரும் இரண்டு வாரங்களும் மிகவும் அபாயகரமான காலப்பகுதியாக இருக்கின்றது. ஆனால் விழிப்பாக இருந்து பொதுமக்கள் ஒத்துழைப்பினை வழங்க வேண்டும். தற்பொழுது அரசாங்கத்தினால் திரையரங்குகள் மற்றும் ஏனைய விடயங்களிலும் இயல்பு நிலையை ஏற்படுத்தும் முகமாக சில மாற்றங்களை ஏற்படுத்தி உள்ளார்கள். இந்த நிலையிலே கூடுதலாக விழிப்பாக இருக்க வேண்டியுள்ளது.

எதிர்வரும் 11 ஆம் திகதி பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. பாடசாலைகளை ஆரம்பிப்பது குறித்து கல்வித் திணைக்களம், கல்வி அமைச்சு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் ஊடாக சிறப்பான ஒழுங்கினை ஏற்படுத்தியுள்ளது. குறித்த விடயம் தொடர்பில் விழிப்பாக செயற்பட்டு பாடசாலைகள் ஆரம்பிக்கும் போதும் பெற்றோர் மற்றும் பாடசாலையுடன் சம்பந்தப்பட்ட அனைவரும் குறித்த விடயங்கள் தொடர்பில் மிகவும் விழிப்பாகச் செயற்படுவதன் மூலம் குறித்த கட்டுப்பாட்டினை தொடர்ச்சியாக பேண முடியும். இந்த நடைமுறையானது சுகாதாரப் பகுதியினருடைய ஒத்துழைப்புடன் மாணவர்களுக்கு கல்வியானது தாமதமின்றி கிடைக்கக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தும். மேலும் தனியார் கல்வி நிலையங்களைப் பொறுத்தவரை இந்த வாரத்தில் அரசினுடைய அறிவுறுத்தலுக்காக காத்திருக்கின்றோம்.

யாழில் சந்தைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ள நிலையில் அவற்றை மீள திறப்பதற்குரிய மாற்று ஒழுங்கு தொடர்பில் தற்போது நாங்கள் ஆராய்ந்து வருகின்றோம். அந்த மாற்று ஒழுங்கின் அடிப்படையில் சந்தைகளை மீளத்திறப்பதற்கு ஏற்பாடுகளை நாங்கள் மிக விரைவில் செயற்படுத்தவுள்ளோம். அதேவேளையில் போக்குவரத்து விடயத்திலும் மிகவும் கவனமாக செயற்பட வேண்டியுள்ளது. அபாய வலயங்களுக்குச் சென்று வருபவர்கள் தங்களுடைய விபரங்களை கட்டாயமாக பதிவு செய்ய வேண்டும். அதேவேளை யாழ்.மாவட்டத்தில் துரித அன்டிஜன் பரிசோதனை செய்வதற்கும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது. அந்த முடிவு விரைவில் வடக்கு சுகாதார பிரிவால் அறிவிக்கப்பட உள்ளது. அதாவது யாழ்.மாவட்டத்திற்குள் நுழையும் வாயில்களில் ஆனையிறவு மற்றும் சங்குப்பிட்டி போன்ற இடங்களில் துரித அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

எதிர்வரும் நாட்களில் குறித்த அன்டிஜன் பரிசோதனையினை ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4-33)

# எந்த கட்சிக்கும் அநீதி இழைக்கப்படவில்லை-பீரிஸ்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன பெரமுன கூட்டணியின் உள்ளக விவகாரத்தை சுதந்திரக் கட்சியின் தலைவர் சர்வதேச மட்டத்திற்கு கொண்டு சென்றமை பொருத்தமற்ற செயற்பாடாகும். பொதுஜன பெரமுனவுடன் கூட்டணியமைத்துள்ள எந்தக் கட்சிக்கும் இதுவரையில் அநீதி இழைக்கப்படவில்லை.



அனைத்துத் தரப்பினரது கட்சி தனித்துவமும் பாதுகாக்கப்பட்டுள்ளது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் பொதுத் தேர்தலில் பெற்றுக் கொண்ட மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை மக்களுக்காக பயன்படுத்துவோம்.

பல எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் நாட்டு மக்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை பலமாக ஸ்தாபித்துள்ளார்கள். பொதுஜன பெரமுனவுடன் பிற கட்சிகள் ஒன்றிணைந்துள்ளமையினால் இந்த வெற்றியை பெற முடிந்தது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சர்வதேச அரங்கில் உள்ளக அரசியல் குறித்து கருத்துரைத்தது இல்லை. ஏன் எதிர்க்கட்சியைக்கூட விமர்சித்தது இல்லை. உள்ளக அரசியலில் பல முரண்பாடுகள் காணப்படுவது இயல்பானதொரு விடயம். ஆனால் இதனை சர்வதேச அரங்கிற்கு கொண்டு செல்லும் போது நாடு மலினப்படுத்தப்படும். தற்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ எக்காலத்திலும் இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்கவில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன பெரமுன கூட்டணியின் உள்ளக விவகாரம் மற்றும் கருத்து முரண்பாடுகளை சுதந்திரக் கட்சியின் தலைவர் இந்திய ஊடகத்திடம் குறிப்பிட்டுள்ளமை இன்று அரசியல் களத்தில் பிரதான பேசு பொருளாக உள்ளது.

உள்ளக பிரச்சினையை சர்வதேச ஊடகங்களிடம் குறிப்பிட்டால் மாத்திரம் தீர்வை பெற்றுக் கொள்ள முடியாது. கூட்டணியில் இருந்து கொண்டு இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளமை தவறாகும். இதனால் சர்வதேச மட்டத்தில் நாடு மலினப்படுத்தப்பட்டுள்ளது.

பொதுஜன பெரமுனவுடன் கூட்டணியமைத்துள்ள எக்கட்சிக்கும் இதுவரையில் அநீதி இழைக்கப்படவில்லை. அனைத்து கட்சிகளின் தனித்துவமும் மதிக்கப்பட்டுள்ளது.

பொதுத்தேர்தலில் யாரை பாராளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டும் என்பதை பொதுஜன பெரமுன தீர்மானிக்கவில்லை. நாட்டு மக்களே அதனை தீர்மானித்தார்கள். ஆகவே கூட்டணிக்குள் எழுந்துள்ள கருத்து முரண்பாட்டுக்கு பேச்சுவார்த்தை ஊடாக தீர்வு காண முடியும். பொதுஜன பெரமுன கூட்டணியாகவே தொடர்ந்து பயணிக்கும். மாகாண சபை தேர்தல் குறித்து தற்போது மாறுபட்ட கருத்துக்கள் குறிப்பிடப்படுகின்றன. கடந்த அரசாங்கம் மக்கள் மத்தியில் வாக்கு கேட்க அஞ்சி தேர்தல் முறைமையில் திட்டமிட்டு சிக்கல் நிலையை ஏற்படுத்தியது. தேர்தலை எந்த முறைமையில் நடத்துவது என்ற பிரச்சினை காணப்படுகிறது. அதற்கு பாராளுமன்றம் ஊடாகவே தீர்வை பெற முடியும் என அவர் தெரிவித்தார். (நி-4)

# உக்ரேய்னில் இருந்து அழைத்து வரப்படுவோர் ஆட்சியாளர்களுக்கு நெருக்கமானவர்கள்

## ஐ.தே.க.குற்றச்சாட்டு

(கொழும்பு)

உலகளாவிய சுகாதாரத் தரவுகளின்படி, கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் உக்ரேய்ன் 17 ஆவது இடத்தில் இருக்கின்றது.

ஆனால் அரசாங்கம் இத்தகைய முக்கிய காரணிகளைப் புறக்கணித்துவிட்டு, ஆட்சியாளர்களின் குடும்பத்துக்கு நெருக்கமான தனிநபர் ஒருவரினால் ஏற்பாடு செய்யப்பட்டமையினால் உக்ரேய்னிலிருந்து சுற்றுலாப்பயணிகளை அழைத்து வருகின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சி யின் உறுப்பினர் சந்தித் சமரசிங்க குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

இந்த சுற்றுலாப்பயணத்தை ஏற்பாடு செய்வதில் எந்த கம்பனிகள் தொடர்புபட்டிருக் கின்றன? அவற்றின் உரிமையாளர்கள் யார்? அவர்கள் எந்த அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர்? இதற்கான அரசாங்கத்தினால் எந்தளவு நிதி செலவிடப்பட்டுள்ளது? என்பது போன்ற விடயங்களை அரசாங்கம் வெளிப்படுத்தவில்லை என்றும் அவர் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

ஐக்கிய தேசியக் கட்சியினால் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் கூறியதாவது,

உரிய சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றாமல் வெளிநாடுகளிலிருந்து சுற்றுலாப் பயணிகளை அழைத்து வருவதன் ஊடாக அரசாங்கம் நாட்டு மக்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றது.

ஆனால் அரசாங்கம் இவையனைத்தையும் புறக்கணித்துவிட்டு, ஆட்சியாளர் குடும்பத்துக்கு நெருக்கமான தனிநபர் ஒருவரினால் ஏற்பாடு செய்யப்பட்ட சுற்றுலாப் பயணிகளை அழைத்து வரும் இச் செயற்றிட்டத்தை நடை முறைப்படுத்தியுள்ளது என்று அவர் குற்றம் சாட்டினார். (நி-4)

# சுகாதார விதிமுறைகள்; மீறுவோருக்கு பி.சி.ஆர்.சோதனை

**(கொழும்பு) முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடை□வெளி பேணாமை போன்ற சுகாதார விதிமுறை களை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதோடு பீ.சீ.ஆர். மற்றும் ரெபிட் அன்டிஜன் பரிசோதனைகளுக்கும் உட்படுத்தப்படுவர்.**

சுகாதார ஆலோசனைளுக்கமைய முகக்கவசம் அணியாமையும் கொரோனாப் பரவலுக்கான ஒரு க்ரரணமாக அமையலாம் என்ற அடிப்படையில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.



இக்குற்றச்சாட்டு தொடர்பில் நேற்று முன்தினம் 74 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனடிப்படையில் கடந்த ஒக்டோபர் 30 ஆம் திகதி முதல் இதுவரை 2,172 பேர் மேற்படி சுகாதார விதி முறைகளைப் பின்பற்றாமை தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(நி-4)

# தமிழ் - சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் இலங்கைக்கு தடுப்பூசி

(கொழும்பு)

கொவிட்-19 வைரஸிற்கான முதலாவது தடுப்பூசியை இந்நாட்டவர்களுக்கு பெற்றுக் கொடுக்கக்கூடிய தினம் தொடர்பில் ஜனாதிபதி பிரதான ஆலோசகர் லலித் வீரதுங்க வெளிப்படுத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அதன்படி. எதிர்வரும் தமிழ் மற்றும் சிங்களப் புத்தாண்டிற்கு முன்னர் கொவிட் 19 வைரஸிற்கான முதலாவது தடுப்பூசியை இந்நாட்டவர்களுக்கு பெற்றுக் கொடுக்க முடியும்.

அதற்கான கலந்துரையாடல் தற்போது இறுதி மட்டத்தில் இருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார். (நி-4)

# சடலங்களை எரிப்பதா? புதைப்பதா? இதுவல்ல நாட்டின் முக்கிய பிரச்சினை

## எச்சரிக்கை விடுக்கிறார் சாகர

(கொழும்பு)

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தினால் உயிரிழப்பவர்களின் உடலை தகனம் செய்வதா? அல்லது அடக்கம் செய்வதா? என்பது நாட்டின் தற்போதைய பிரதான பிரச்சினையில்லை.

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்தி இருப்பவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது சவால் மிக்கது.

ஆகவே உடல்கள் தகனம் செய்வதை வைத்து அரசியல் இலாபம் தேடுவதை எதிர்த்தரப்பினர் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தில் இருந்து உயிருடன் இருப்பவர்களை பாதுகாப்பது சவாலானது. நெருக்கடியான சூழ்நிலையில் நாட்டு மக்களைப் பாதுகாக்க அரசாங்கம் பல நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தினால் உயிரிழப்பவர்களின் இறுதிக் கிரியைகள் குறித்து தீர்மானம் எடுக்கும் பொறுப்பு சுகாதார தரப்பினரிடமே உள்ளது.



மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் மாகாண சபைகள் நிர்வகிப்படுவது ஜனநாயகத்துக்கு முரணானது என்பதை பொதுஜன பெரமுனவின் கொள்கையாக குறிப்பிட்டுள்ளோம்.

மாகாண சபை தேர்தல் குறித்து அரசாங்கம் அனைத்து தரப்பினருடன் பேச்சுவார்த்தையினை முன்னெடுத்து உரிய தீர்மானத்தை எடுக்கும். ஜனநாயக கொள்கைக்கு முரணாக செயற்படுவது அரசாங்கத்தின் நோக்கமல்ல எனவும் அவர் தெரிவித்தார். (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# வேலை வெறியர்கள்

ஒரு அம்மா சொன்னார்... எங்கள் வீட்டுக்காரர் எப்பொழுது பார்த்தாலும் வேலை வேலை என்று அலைகின்றார். குடும்பத்தைக் கவனிப்பதற்கே அவருக்கு நேரம் கிடைப்பதில்லையாம் என்று.

இப்படிப்பட்ட ஆசாமிகள் மனைவி, மக்களோடு மகிழ்ச்சியாக இருக்க வேண்டிய விடுமுறை நாட்களைக் கூட, வீணாக்குபவர்கள். அந்த நாட்களிலேயும் அலுவலகங்களிலேயே இருக்கின்றார்கள்.

வேலை செய்பவர்களிலே இரண்டு வகை உண்டு. ஒரு வகை எப்படி என்றால் வேலையை விருப்பத்தோடு செய்பவர்கள். ஒரு ஈடுபாட்டோடு செய்பவர்கள். இவர்கள் வேலைப் பிரியர்கள் (Work lover) வேலையே வாழ்க்கை என்று ஓடிக் கொண்டே இருப்பவர்கள் இன்னொரு வகை. இவர்கள் வேலை வெறியர்கள் . (Work Aholic). சரி இந்த வேலை வெறியர்களுக்கு நோக்கம் என்ன தெரியுமா? மற்றவர்கள் நம்மைப் பாராட்ட வேண்டும் என்கின்ற எண்ணம் இவர்களுக்குள்ளே எப்பொழுதும் இருந்து கொண்டே இருக்கும்.எவ்வளவு கடுமையாக உழைக்கின்றார் பார்த்தீர்களா...?என்று எல்லோரும் நினைக்க வேண்டுமாம்.

இரண்டாவது காரணம் தனக்கு சமூகத்திலே ஒரு தகுதி (Status ) வேண்டும். தன்னுடைய திறமையை இந்த உலகத்திற்கு நிரூபித்துக் காட்ட வேண்டும் என்னும் வெறி..

மூன்றாவது காரணம் கவலைகளை மறக்க அது ஒரு வடிகால். குடும்பத்திலே ஏகப்பட்ட பிரச்சினைகள். அதை மறப்பதற்கும் மறைக்கிறதற்கும் வேலை செய்ய ஆரம்பிக்கிறார்கள். அதிவே ஒரு பழக்கமாக ஆகிவிடுகின்றது.

இந்த வேலை வெறியர்களாலே பல ரகம் உண்டு. எட்ட முடியாத இலக்கை ஏற்படுத்திக் கொள்வது... பின்பு அதைப் பிடிக்க எட்டி எட்டி பார்ப்பது. முடியவில்லை என்றால் கடுமையாக உழைப்பது. விழுந்து விழுந்து வேலை செய்வது. கடைசியில் இருதய நோய் வந்து விழுந்துவிடுவது.

இப்படி ஒரு ரகம். அவரை மாதிரி பாட முடியவில்லையே, அவர் மாதிரி எழுத முடியவில்லையே, அவர் மாதிரி நடிக்க முடியவில்லையே இதெல்லாம் இந்த ரகம். வேலை வெறியர்களிலே இரண்டாவது ரகம் என்ன தெரியுமா?

ஒரு வேலையை ஒரு சின்னத் தப்பு கூட இல்லாமல் பிரமாதமாக செய்ய வேண்டும் என்று முடிவு செய்துவிட்டு; அதற்காகவே விபரங்களைச் சேகரிக்க காலத்தை வீணாக்குவது. கடைசியிலே குழம்பிப் போவது.

சில அலுவலர்கள் ஒரு மாநாட்டிலே பேசுவதற்காக புள்ளி விபரம் சேகரிப்பார்கள். மற்ற பணியாளர்களை வாட்டி வதைத்து இரவு-பகலாக சேகரிப்பார்கள். கடைசியில் மாநாட்டிலே பேசுகின்ற பொழுது சொதப்பி விடுவார்கள். ஏன் என்றால் புள்ளி விபரம் கருத்து எல்லாம் மனதிலே சரியாக பதிய வைத்திருக்க மாட்டார்கள்.

அதெல்லாம் பேப்பரில் மட்டும் சரியாக இருக்கும். வேலை வெறியர்கள் சாதிப்பது ஒன்றுமில்லை. ஏன் என்றால் அவர்களிடம் எந்தவிதமான தனித்துவமும் ( Originality) கிடையாது. அவர்கள் புது விதமாக ஆக்கபூர்வமாக எதையும் சிந்திக்க மாட்டார்கள். புரட்சிகரமான திட்டங்கள் எதுவும் அவர்களிடம் இருக்காது.

காலம் முழுவதும் தேவையில்லாத விபரங்களைச் சேகரிக்கிறதிலேயும் அர்த்தமில்லாத வழி முறைகளையும் பழைமையான சட்ட திட்டங்களையும் பின்பற்றுவதிலேயும் கழித்து விடுகின்றார்கள்.

கொம்பியூட்டர் மாதிரித்தான். புள்ளி விபரங்கள் இருக்கும். சுயமாக சிந்திக்கவும் தெரியாது, முடிவெடுக்கவும் தெரியாது.

சரி...இந்த வேலை வெறியர்கள் கடைசியில் என்ன ஆகுகின்றார்கள் தெரியுமா? இவர்கள் குடும்ப வாழ்க்கை வீணாகப் போகின்றது, மனைவியுடன் கூட பேச முடியாது, குழந்தைகளுடன் கூட விளையாட முடியாது, பொழுது போக்காக வெளியிலே எங்கேயும் போக முடியாது. இப்படி கொஞ்ச நாட்களிலே படிப்படியாக குடும்ப வாழ்க்கை பாழாகி விடுகின்றது.

சரி...இந்த சிக்கலில் இருந்து எப்படித் தப்பிக்கொள்வது? இந்த வேலை வெறியர்களுக்கு விடுதலையே கிடையாதா? இப்படி ஒரு கேள்விக்கு நிபுணர்கள் மூன்று வழிகளைச் சொல்கின்றார்கள். முதலில் உன்னைப்பார்.. Look at Yourself. இரண்டாவது உன் உள்ளே பார் Look inside yourself. மூன்றாவது உன்னையே தூரத்தில் பார்... Look away from yourself.

வேலை வெறியர்களுக்கு வேதனை கொடுக்கின்ற சமாச்சாரங்கள் மூன்று. ஒன்று தொலைபேசி, இரண்டாவது கடிகாரம், மூன்றாவது கலண்டர். இந்த மூன்றும் நமக்கு உதவ வேண்டுமே தவிர நாம் அதற்கு அடிமை ஆகிவிடக் கூடாது. ஏதாவது ஒரு பொழுதுபோக்கு இருக்க வேண்டும்.

இது நேரத்தை வீணாக்காது. சக்தியைப் புதுப்பிக்கும். பழைய நண்பர்களையெல்லாம் பார்க்க வேண்டும், பேச வேண்டும், புத்தகங்கள் படிக்க வேண்டும், தனிமையை நாட வேண்டும், சும்மா இருக்கவும் பழகவேண்டும். வேலை வெறியர்கள் என்பவர்கள் பிறக்கிறதில்லை. உருவாக்கப்படுகின்றார்கள். இது ஒரு வியாதி மாதிரித் தான். இதற்கு மருந்து எங்கள் கையிலே தான் இருக்கின்றது.

அலுவலகத்திலே வேலை பார்க்கின்ற ஒருத்தர் காலை பத்து மணி. அவசர அவசரமாக ஓடி வந்தார். அலுவலகத்துக்குள்ளே புகுந்தார். கொஞ்ச நேரத்திலே அந்த வேகத்திலே வெளியிலே ஓடிவந்தார்.

ஒரு முக்கியமான சமாச்சாரத்தை வீட்டிலே வைத்து விட்டு வந்து விட்டேன்.. ஓடிப்போய் எடுத்துக்கொண்டு வந்துவிடுகின்றேன் என்றார்.


அதற்கு ஏன் ஓடுகின்றீர்கள். உங்கள் ஸ்கூட்டரை எடுத்துக் கொண்டு போங்களேன் என்றார்கள். நான் வீட்டிலே விட்டுவிட்டு வந்ததே என்னுடைய ஸ்கூட்டரைத் தான். அதைத்தான் எடுத்துக் கொண்டு வரப் போகின்றேன் என்று சொல்லிவிட்டு அவசரமாக ஓடினார்.

# நாடுகளின் ஆட்புல எல்லைகளும் இலங்கையின் எல்லையோரக் கடல்எல்லை நிர்ணயமும்

04

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.





எல்லைக்கோடு

ஒரு நாட்டின் ஆட்புல எல்லையின் கூறுகளில் நாட்டின் எல்லை பற்றி பார்த்தோம். இனி மற்றைய மூன்று கூறுகள் பற்றிப் பார்ப்போம்.

**2. ஒரு நாட்டின் ஆட்புல எல்லையின் கூறு - தேசிய நீர்நிலைகள் (National Waters)**

நாட்டின் எல்லைக்குள் இருக்கும், ஏரிகள் (Lakes) கால்வாய்கள் (Canals) ஆறுகள் (Rivers) துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறைகள் (Harbours) ஆகியவற்றில் உள்ள நீர்நிலைகள் அந்நாட்டின் தேசிய நீர்நிலைகள் ஆகும். இவையும் அந்நாட்டின் ஆட்புல எல்லையின் ஒரு பகுதியே ஆகும். தேசிய நீர்நிலைகள் என்பது அதன்படி நிலப் பகுதியையும் உள்ளடக்கியதாகும்.

**3. ஒரு நாட்டின் ஆட்புல எல்லையின் கூறு - வான் எல்லை (Aerial Territory)**


ஒரு நாட்டின் ஆட்புல எல்லைக்குட்பட்ட நிலம் மற்றும் நீர்ப்பகுதியின் மேலே உள்ள வான் பகுதியும் அந்நாட்டின் அதிகார வரம்பிற்குட்பட்ட எல்லைப் பகுதியே ஆகும். ஆரம்பத்தில் ஒரு நாட்டின் ஆட்புல எல்லைக்குட்பட்ட பகுதியின் மேல் வரம்பற்ற உயரம் வரையிலுமுள்ள வானம் அந்நாட்டிற்கே சொ்ந்தம் என்று கூறப்பட்டது. ஆனால் இக்கருத்து அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படாவிட்டாலும் ஒரு நாட்டின் வலிமைக்கேற்ப அந்நாட்டால் பாதுகாக்க முடிந்த அளவு உயரம் வரை அந்நாட்டிற்கே சொந்தமாக கருதப்படுகிறது. அந்த எல்லைக்குள் அத்துமீறி நுழையும் மற்ற நாட்டின் போர் விமானங்களை (முடிந்தால்) சுட்டு வீழ்த்தும் உரிமை ஒவ்வொரு நாட்டிற்கும் உண்டு. ஆனால் பயணிகள் போக்குவரத்து போன்ற தீங்கற்ற வழியுரிமை அனைத்து நாடுகளுக்கும் உண்டு என்பது சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் கொள்கையாகும்.

**4. ஒரு நாட்டின் ஆட்புல எல்லையின் கூறு - எல்லையோர நீர்நிலைகள் (territorial Waters)**

எல்லையோர நீர்நிலைகள் என்பது, அந்நாட்டின் எல்லையோரத்தில் அல்லது அந்நாட்டைச் சுற்றி அமைந்திருக்கும் வளைகுடாக்கள் (Gulfs) விரிகுடாக்கள் (Bays) மற்றும் நீரிணை (ஜலசந்தி) (Straits) களை உள்ளடக்கிய கடற்பகுதி (Maritime Zone) அல்லது கடல்சுற்று (Maritime Belt) ஆகும். இவை ஒரு நாட்டின் ஆட்புல எல்லை வரம்புகளுக்கு உட்பட்ட பகுதியாகும். எல்லையோர நீர்நிலைகள் என்பது, கண்டத்திட்ட தொடர்ச்சியான கடல் மண்டலம், தனியுரிமை பொருளாதார மண்டலம் மற்றும் கடல் அடி நிலப் பகுதியையும் உள்ளடக்கியதாகும். இது பற்றி பார்க்குமுன் சமுத்திர நிலவுருவங்கள் பற்றி தெரிந்திருப்பது நல்லதாகும்.

**சமுத்திர நிலவுருவங்கள்**

புவிமேற்பரப்பில் பல நிலவுருவங்கள் காணப்படுவது போல சமுத்திர பரப்பிலும் நிலவுருவங்கள் காணப்படுகின்றன.




**படம் - 3 அ**

சமுத்திரங்களில் காணப்படும் நிலவுருவங்களாக பின்வருவன காணப்படுகின்றன.

1)கண்ட எல்லை -**Continental margins** (இதில் கண்டத்திட்டு (**continental shelf**). கண்டசரிவு (**continental slope**). கண்டஎழுச்சி (**continental rise**) ஆகியவை அடங்கும்). உரு-3 ஐப்பார்க்க.

2)ஆழ்கடல்தரை- **Deep ocean floors** (இதில் பேராழ் சமவெளிகள் (**Abyssal plains**). - பேராழ் குன்றுகள் (**Abyssal hills**). கடற்குன்றுகள் (**sea mount and trends**). ஆழ்கடல் கால்வாய் (**Deep ocean channels** உள்ளடங்கும்.) உரு-4ஐப் பார்க்க.

3) தீவுகளும் பேரகழிகளும் - **Islands areas and trench** (இதில் எரிமலை தீவுகள் (**volcano islands**). பேரகழிகள் உள்ளடங்கும்).


4) முறிவு வலயம் - **Fracture zones**

**கண்டசரிவு (continental slope) என்றால் என்ன?**

கடல்தரைக்கும் , கண்டதிட்டுக்கும் இடைப்பட்ட சரிவு மிக்க சாய்நில பகுதி ஆகும். கண்டதிட்டின் விளிம்பிலிருந்து கடல்தரை நோக்கி திட்டின் சராசரி சரிவை விட அதிக செறிவுடன் அமைந்து காணப்படும். இது 100-200மீற்றர் ஆழத்தில் ஆரம்பித்து 1500-2000 மீற்றர் ஆழத்தில் முடிவடைகின்றது. இதன் சாய்வு அகலம் 15-35 கிலோமீற்றர் ஆகும். இதில் பீடபூமிகள், மேட்டுநிலங்கள், சிறுகுன்றுகள், பள்ளங்கள் காணப்படுகின்றது. (உரு-3)




கண்ட எல்லை (Continental margins)




**கண்ட எழுச்சி (continental rise) என்றால் என்ன?**

ஆழ்கடல் தரையை கண்ட சரிவுடன் இணைக்கும் கடலடி நிலப்பகுதியே கண்ட எழுச்சி ஆகும். இவ் எழுச்சிகளின் அகலம் 600கிலோமீற்றர் ஆகும். இதன் ஆழம் 1500-5000மீற்றர் ஆகும். இதில் பலகுடைவு பள்ளத்தாக்கும் சிறுகால்வாயும் ஆழ்கடல் விசிறிகளும் உண்டு. (உரு-3)




**படம் - 3 ஆ**

**கண்டத்திட்டு / கண்டமேடு (continental shelf) என்றால் என்ன?**

கண்டத்தின் முடிவு பகுதியே கண்டத்திட்டு ஆகும். நிலத்திலிருந்து மிகக் குறைந்த சாய்வுடன் கடலினை நோக்கி சரிந்து செல்லும் குறை ஆளப்பகுதியான இது திட்டு விளிம்பில் முடிவடைகின்றது. இதன் சராசரி அகலம் 73. 5 கிலோமீற்றர் ஆகும். இதன் ஆழம் 130 மீற்றர் ஆகும். இது மீனின உற்பத்தி. எண்ணெய் வளம், பிளந்தான் வளர்ச்சி ஆகியன வற்றிற்கு முக்கியம் வாய்ந்ததாக காணப்படுகின்றது. (உரு-3)

**ஒரு கண்டதிட்டு (continental shelf) என்பது ஒரு கண்டத்தின் ஒரு பகுதியாகும், இது ஒரு கடல் திட்டு என்றும் அழைக்கப்படும் ஒப்பீட்டளவில் ஆழமற்ற கடல் நீரின் பரப்பளவில் மூழ்கியுள்ள பகுதியாகும். கடல் தரைக்கும், கண்டதிட்டுக்கும் இடைப்பட்ட சரிவு மிக்க சாய்நிலப் பகுதி கண்டச் சரிவாகும்.**

**கடலில் அமைந்துள்ள மத்திய மலைத்தொடர்கள் என்றால் என்ன?**

கடலில் அமைந்துள்ள மலைத் தொடர்களை நீராடி மலை தொடர்கள் என்பர். அத்திலாந்திக் நடுமலை தொடர், Y வடிவ இந்துசமுத்திர மலைத்தொடர், பசுபிக் கிழக்கு மலைத்தொடர் போன்றன முக்கியம் பெற்றவை ஆகும். இவை 5600கிலோமீற்றர் நீளத்தினை கொண்டு சமுத்திரங்களினூடாக பிரதிபலிக்கின்றன. இவற்றின் சராசரி உயரம் 1000-3000மீற்றர் வரையும் அகலம் 1500கிலோமீற்றர் ஆகும். அத்திலாந்திக் மத்திய மலைத்தொடரினை அவதானிக்குமிடத்து இது வடக்கு தெற்காக இங்கிலாந்தின் ஜான் மேயன் தீவினை ஆரம்பப் புள்ளியாகவும் பூவேட் தீவினை முடிவு புள்ளியாகவும் கொண்டுள்ளது.

(தொடரும்...)

# மகர சிறைச்சாலைச்சம்பவம்; இறுதி அறிக்கை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

மகர சிறைச்சாலையில் அண்மையில் இடம்பெற்ற மோதல் நீண்ட காலமாக கைதிகளுக்கு இடையில் நிலவிய சதித்திட்டத்தின் விளைவாக ஏற்படவில்லை என அது தொடர்பில் ஆராய்ந்த ஐவர் அடங்கிய குழுவின் இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கை நேற்று முன்தினம் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலை அதிகாரிகளில் பற்றாக்குறை நிலவியதால் உரிய பாதுகாப்பு மற்றும் பராமரிப்பும் வழங்கமுடியாமல் போயுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

100 கைதிகள் மாத்திரம் இருக்க வேண்டிய சிறை விடுதியில் 300 இற்கும் மேற்பட்டோர் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் கைதிகள் சுதந்திரமாக வசிப்பதற்கான அனுமதி வழங்கப்படாமையே இந்த அமைதியின்மைக்கு காரணம் எனவும் அந்த இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-4)

# ஆலய வழிபாடு ஏன் - எதற்கு - எப்படி

## சங்கடம் தீர்க்கும் சந்நதிகள்

(தொடர்ச்சி)

அதன்பிறகு மறக்காமல் நவக்கிரக வழிபாட்டைச் செய்தல் வேண்டும். நமக்கு நல்வினை ஏற்படுத்தித் தருபவை கிரகங்கள்தான்.

ஒவ்வொரு கிரகமும் ஒரு பலனைத் தரவல்லது. சூரியனை வழிபட்டால் பேரறிவு கிடைக்கும். அதுபோல சந்திர வழிபாடு புகழையும் செவ்வாய் கிரகம் செல்வத்தையும் புதன் கல்வியையும் குரு நன்மதிப்பையும் சுக்கிரன் அழகு, நாவன்மையையும் சனி செயலாற்றலையும் ராகு காரிய சித்தியையும் கேது குல அபிவிருத்தியையும் தரும். எனவே நவக்கிரக சந்நதியை 9 சுற்றுச் சுற்றி வருவது நல்லது.

சந்நதி தோறும் சென்ற இந்த வழிபாட்டுக்கு மத்தியில் இடையிடையே ஆலய தல விருட்சம், தீர்த்தக்குளம், நந்தவனம், மண்டபங்கள், வாகனங்களை நீங்கள் பார்க்கக் கூடும். அவற்றுக்கும் நீங்கள் உரிய மரியாதை செய்தல் வேண்டும்.

இதுவரை நீங்கள் சந்நதி வாரியாக வழிபட்டதைக் கண்ணோட்டமாகப் பார்த்தால் நாம் ஓம் எனும் பிரணவ மந்திர வடிவில் ஆலயத்தைச் சுற்றி வந்திருப்பது புரியும்.

நவக்கிரகத்தை வழிபட்டு முடித்ததும் கொடி மரத்துக்கு அருகில் அமர்ந்து பஞ்சாட்சரத்தை ஜெபிக்க வேண்டும். இது நாம் மனதால் செய்யும் வழிபாடு. இது முக்கியமானது. இதை செய்தால் தான் ஆலய வழிபாடு முழுமை பெறும்.

கொடி மரத்துக்கு அருகில் பஞ்சாட்சர மந்திரத்தைச் சொல்லி முடித்ததும் எழுந்து வேறொரு பகுதியில் சற்று அமர்ந்து பிறகு வீட்டுக்குப் புறப்பட வேண்டும்.

ஏனெனில் சிவாலயங்களில் 7 சிரஞ்சீவிகள் தங்கி இருந்து சிவ தரிசனம் செய்பவர்களை அவர்கள் வீடு வரை பின் தொடர்ந்து வந்து மரியாதை செய்வார்களாம்.

அவர்களிடம் "நீங்கள் ஆலயத்திலேயே இருங்கள். நாங்கள் போய் வருகிறோம்" என்பதற்காகத்தான் சிவாலயங்களில் வழிபாடு முடிந்த பிறகு சிறிது நேரம் உட்கார்ந்து வருவதாகத் தத்துவமாகும். இவ்வாறு முறைப்படி ஆலய தரிசனம் செய்தால் மட்டுமே ஆலய தரிசனம் செய்த முழுப் பயனும் கிடைக்கும்.

பெருமாள் கோவில்களில் கருவறைப் பகுதிக்குச் செல்லும் முன்பு கொடி மரம், பலிபீடம் வணங்குதல் வேண்டும். பிறகு சுவாமி எதிரே உள்ள கருடாழ்வாரை வணங்கி உள்ளே செல்ல வேண்டும்.

அப்போது திவ்யப் பிரபந்த பாடல்களைப் பாடி நாம் பெருமாளிடம் வேண்டுதல்களை வைக்கலாம். பிறகு மறக்காமல் துளசியையும் தீர்த்தத்தையும் பெற வேண்டும். இதையடுத்து சடாரி பெறுவது மிக மிக முக்கியமானதாகும்.

பின்னர் தாயார் சந்நதிக்குச் சென்று வழிபட வேண்டும். இதைத் தொடர்ந்து பிரகாரங்களை வலம் வரும்போது ஆஞ்சநேயர், ஆண்டாள் சந்நதி, சக்கரத்தாழ்வார் சந்நதி, ராமர் சந்நதி, வேணுகோபாலன் சந்நதி, கிருஷ்ணர் சந்நதி, ஹயக்ரீவர் சந்நதி, நம்மாழ்வார் சந்நதி போன்றவைகளைப் பார்த்து வழிபட வேண்டும்.

லட்சுமி நரசிம்மர் சந்நதியில் வெள்ளிக்கிழமை அல்லது சுவாதி நட்சத்திர தினத்தன்று பானகம் நைவேத்தியம் செய்து வழிபட்டால் நீங்கள் நினைத்தது நடக்கும். சக்கரத்தாழ்வாரிடம் மனம் உருகி வேண்டினால் உங்களுக்கு வெற்றி மீது வெற்றி வரும்.

இப்படி சந்நதிகளுக்கு உரிய வழிபாட்டு முறைகளையும் பலன்களையும் தெரிந்து கொண்டு வழிபடுங்கள். அது உங்களை முக்திப் பாதைக்கு நிச்சயம் அழைத்துச் செல்லும்.

சந்நதிகளில் வழிபடும் முறைகளைப் பார்த்து விட்டீர்கள். ஆலய தரிசனம் இன்னும் முடிந்து விடவில்லை.

ஆலயத்துக்குள் இன்னும் நிறைய இரகசியங்கள் உள்ளன. அதில் ஒன்றான தல விருட்சம் பற்றி இனி பார்க்கலாம். (முற்றும்)

# செய்தித்துளிகள்

## மேலும் சில பகுதிகள் முடக்கம்

(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்தின் முகத்துவாரம் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட மேலும் மூன்று பிரதேசங்கள் நேற்றுச் செவ்வாய்க் கிழமை அதிகாலை 5 மணி முதல் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கமைய முகத்துவாரம் பொலிஸ் அதிகாரத்திற்கு உட்பட்ட புனித - என்றூஸ் வீதி, புனித - என்றூஸ் மேல் மற்றும் கீழ் வீதிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. (நி-4)

## மேலும் 423 பேர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

கொவிட்-19 பரவல் காரணமாக நாடு திரும்ப முடியாமல் வெளிநாடுகளில் சிக்கித் தவித்த மேலும் 423 இலங்கையர்கள் நேற்றுக் காலை நாடு திரும்பியுள்ளனர்.

விமான நிலையத்தை வந்தடைந்த இவர்கள் விமான நிலையத்தின் மருத்துவ ஆய்வகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு, இலவச பி.சி.ஆர். பரிசோதனைகளுக்குட்படுத்தப்பட்டதுடன், அரச தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (நி-4)

## கடத்தப்பட்ட தேரர் சடலமாக மீட்பு

(கொழும்பு)

அங்வெல்ல - கொடிகந்த தியான மண்டபத்திலிருந்து கடத்திச் செல்லப்பட்ட தேரர் எரிக்கப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பில் பெண்ணொருவர் உட்பட நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

அங்வெல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தும்மோதர, கொஸ்வத்த, கொடிகந்த தியான மண்டபத்திலிருந்து கடந்த சனிக்கிழமை கடத்திச் செல்லப்பட்ட 65 வயதுடைய உடுவில தம்மசிறி தேரரின் சடலம், கொட்டதெனியாவ பகுதியில் அமைந்துள்ள பொது மயானமென்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது. (நி-4)

## வீட்டின் மேல் விழுந்த பாரிய கல்



(ஹற்றன்)

மலையக பகுதிகளில் பிற்பகல் வேளைகளில் பெய்கின்ற கடும் மழையினால் கினிகத்தேனை பிட்டவல கீகியனாகெதர கிராம பகுதியில் உள்ள குடியிருப்பொன்றில் பாரிய கல் ஒன்று சரிந்து விழுந்துள்ளதால் வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

குறித்த சம்பவம் இடம்பெறும் போது வீட்டில் ஆறு பேர் இருந்துள்ள நிலையில், குறித்த ஆறு பேரும் அயலவர்களின் உதவியுடன் காப்பாற்றப்பட்டு தற்போது உறவினர்களின் வீடுகளில் தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டுள்ளனர். (நி-4)




# ஒரு வியாபாரியின் கதை

அவன் ஒரு வியாபாரி. எதிர்காலத்தில் பெரிய தொழிலதிபராக வரவேண்டும் என்று ஆசைப்பட்டான். ஆனால், சரியாகத் திட்டமிட்டுச் செயற்படாததால், அவன் பெரிய நட்டத்தைச் சந்திக்க நேர்ந்தது.


மிகுந்த கவலையில் ஆழ்ந்த அவன் வீட்டுக்குச் செல்ல மனமில்லாமல், ஊரை விட்டு ஒதுக்குப்புறமாக இருந்த ஆற்றங்கரைக்குப் போனான். அங்கே மெல்லிய நிலா வெளிச்சத்தில் ஆற்று மணலில் அமர்ந்து நினைவுகளை ஓடவிட்டான்.

வியாபாரத்தில் தோற்றுப் போன அவலம் அவனை அழுத்தியது. பங்குதாரர்கள் எப்படி யெல்லாம் தனக்குத் துரோகம் செய்தார்கள், நம்ப வைத்துக் கழுத்தறுத்தார்கள் என்று எண்ணியெண்ணி வேதனையில் மூழ்கினான்.

தொடர்ந்து எப்படி வியாபாரம் செய்யப்போகிறோம். குடும்பத்தை எப்படி நடத்தப் போகிறோம் போன்ற எதிர்காலக் கவலைகள் வேறு ஒருபுறம் எழுந்து அடங்கின.

இந்தச் சிந்தனையினாலேயே அவன் வலக்கை அவனை அறியாமல் ஆற்று மணலைத் துழாவி கைக்குத் தட்டுப்பட்ட சிறு சிறு கற்களை எடுத்து ஆற்றில் வீசியவண்ணம் இருந்தது. இப்படியாக அவன் அன்றிரவு முழுதும் அங்கேயே அமர்ந்திருந்தான்.

பொழுது விடிய ஆரம்பித்தது! வெளிச்சம் பரவியது. ஆற்றிலே வீசுவதற்கு அவனைச் சுற்றி இருந்த கற்கள் எல்லாம் தீர்ந்து போய்விட்டன. அவன் தன் கையில் இருந்த கடைசிக் கல்லைப் பார்த்தான் பிரமித்துவிட்டான்.



காரணம் - அது சாதாரண கூழாங்கல் இல்லை. விலை உயர்ந்த வைரக்கல். யாரோ கொள்ளையர்கள் தாங்கள் கொள்ளையடித்து வந்த வைரக்கற்களை ஆற்றங்கரையிலேயே தவறவிட்டு விட்டு ஓடியிருக்கிறார்கள். அவற்றைத் தான் அவன் இருட்டில் இன்னதென்று அறியாமல் எடுத்து வீசியிருக்கிறான். ஒருவகையில் பார்த்தால் நம் மில் பலர் அந்த வியாபாரி மாதிரிதான்.

கடந்த காலம் மற்றும் எதிர்கால நினைவுகளில் மிதந்து கொண்டு நிகழ்காலம் என்கிற வைரக்கற்களை வீணடித்துக் கொண்டிருக்கிறோம்.

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## கலங்க வைத்த கிரானிகஸ் யுத்தம்

மூர்க்கத்தனமான தாக்குதல் மாசிடோனியப் படையில் இருந்து வெளிப்பட்டது. நிறையச் சேதங்கள், உயிர்ப் பலிகள் இரண்டு தரப்புக்கும் தான். ஆனால் பாரசீகப் படைகளுக்குச் சற்று அதிகம். தலைகள் தனியாக, முண்டங்கள் தனியாகக் கிடந்தன.

குடலைப் புரட்டும் இரத்தவாடை. டேரியஸின் படைகள் வலுவிழக்கத் தொடங்கின. சிலர் சரணடைந்தனர். பலர் சுற்றிவளைக்கப்பட்டனர். முந்நூறு வீரர்களைக் களப்பலி மூலம் இழந்திருந்தது மாசிடோனியப் படை.



ஸ்பித்ரிடேட்ஸ் (Spithridates)

டேரியஸின் படையில் இரண்டாயிரம் காலாட்படையினர் சரிந்து கிடந்தனர். அத்தனையும் உயிரற்ற உடல்கள் கூடவே குதிரைப் படை வீரர்களும். அவர்கள் பயன்படுத்திய குதிரைகளும் அப்படியே மல்லாந்து கிடந்தன. ஏராளமான வீரர்கள் சிறைபிடிக்கப்பட்டிருந்தனர்.

முடிந்துவிட்டது. இதற்கு மேல் செய்வதற்கு எதுவுமில்லை. உயிர் பிழைப்பதே சிக்கல் தான். புரிந்திருந்தது டேரியஸுக்கு. யோசிக்க நேரமில்லை. உயிரைக் காப்பாற்றியாக வேண்டும். அதற்குத் தப்பித்தாக வேண்டும். யார் கண்ணுக்கும் தெரியாமல் தப்பிவிட்டார் டேரியஸ்.

விடயம் அலெக்சாண்டருக்கு வந்தது. பிடியுங்கள் அந்த டேரியஸ். இங்கிருந்து அவனைத் தப்பவிடக்கூடாது. உத்தரவிட்டார். அடுத்த கணம் டேரியஸைத் தேடிக்கொண்டு சிட்டாகப் பறந்தன படைகள். நிறைய முயற்சி. நிறையத் தேடல். நிறைய உழைப்பு. ஒன்றும் பயன் இல்லை. டேரீயஸ் தப்பித்தது தப்பித்ததுதான்.

கிரானிகஸ் யுத்தத்தில் இறுதி வெற்றி அலெக்சாண்டருக்குத்தான். எல்லோருக்கும் சந்தோஷம். பார்மீனியோவின் முகத்தில் வெற்றிப் புன்னகை.

மாமன்னர் அலெக்சாண்டர் வாழ்க. வெற்றித்தளபதி பார்மீனியோ வாழ்க. வாழ்த்துக் கோசங்கள் விண்ணைப் பிளந்தன. பெருமிதத்தோடு புறப்பட்டார்.

என்னுடைய வாழ்க்கையில் மாபெரும் வெற்றி. நெஞ்சுக்கு இனிமையான வெற்றி. தந்தை இருந்திருந்தால் எத்தனை சந்தோஷப்பட்டிருப்பார்.

அத்தனை சந்தோசத்திலும் அலெக்சாண்டரின் கண்களில் இருந்து கண்ணீர் எட்டிப் பார்த்தது. மண்டியிட்டு மண்ணுக்கு முத்தமிட்டார். பிலிப்புக்கு அவர் செலுத்திய வெற்றி அஞ்சலி அது.

(தொடரும்)

'சிந்தனை' என்ற வயலுக்கு 'ஆராய்ச்சி' என்ற நீர் பாய்ச்சி 'மூட மதி' என்ற களையை முற்றிலும் அகற்றினால், 'விவேகம்' என்ற விளைவு ஏற்படும்.
– மு.கருணாநிதி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வெளிநாட்டுப் பிரதிநிதிகளுடன் தமிழ்த் தரப்பாகச் சந்தியுங்கள்

ஐ.நாவில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய முன்மொழிவுகளைத் தயாரிப்பதில் பாராளுமன்ற உறுப்பினர்களான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், எம்.ஏ.சுமந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் இணைந்து செயற்படுவதென்ற தீர்மானம் தமிழ் மக்களுக்கு மன ஆறுதலைத் தந்துள்ளது என்ற விடயத்தை இவ்விடத்தில் பிரஸ்தாபித்திருந்தோம்.

தமிழர் தரப்பின் ஆளுமைமிக்கவர்கள் ஒன்றுபட்டு தமிழ் இனத்துக்காகக் குரல் கொடுப்பதென்பது எங்கள் இனத்தின் வல்லமையை – பலத்தை – அறிவார்ந்த மக்கள் சமூகம் என்பதை வெளிப்படுத்துவதாக இருக்கும்.

இது ஒருபுறமிருக்க, இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் நேற்றைய தினம் இலங்கைக்குத் திடீர் விஜயமொன்றை மேற்கொண்டு வந்துள்ளார்.

அவரின் திடீர் விஜயம் எதற்கானது? என்ற கேள்விகள் பலமுனைகளில் இருந்து எழுகை பெற்றுள்ளன.

அந்தக் கேள்விக்கான பதில் ஏதோவொரு வகையில் கிடைத்தே ஆகும்.

எனவே அவரின் வரவு பற்றி நாம் இங்கு சிலாகிக்கவில்லை.

மாறாக, இலங்கைக்குத் திடீர் விஜயத்தை மேற்கொண்டு நேற்றைய தினம் வருகை தந்த இந்திய வெளியுறவு அமைச்சரின் சந்திப்புகளுக்கான நிகழ்ச்சி நிரலில்; ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரைச் சந்திப்பதுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

இங்குதான் ஒரு விடயத்தை நாம் சிந்திக்க வேண்டியுள்ளது.

அதாவது இந்திய வெளியுறவு அமைச்சர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சந்திப்பு நடத்தும்போது, பாராளுமன்ற உறுப்பினர்களான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் அந்தச் சந்திப்பில் இடம்பெற முடியாத சூழ்நிலை உள்ளது.

இந்திய வெளியுறவு அமைச்சர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்திக்கும்போது, அச்சந்திப்பில் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரும் பிரசன்னமாகி இருந்தால், தமிழ் மக்களின் பிரச்சினைகளை எடுத்துரைப்பதற்கும் இந்தியாவின் நிலைப்பாட்டை அறிந்து கொள்வதற்கும் தமிழர் பிரச்சினைக்கான தீர்வில் பின்பற்ற வேண்டிய அணுகுமுறைகளைத் தீர்மானிப்பதற்கும் பேருதவியாக அமையும்.

எனவே இந்திய வெளியுறவு அமைச்சர் மட்டுமன்றி ஏனைய வெளிநாட்டுப் பிரதிநிதிகளையும் சந்திக்கும்போது, தமிழ்த் தரப்பு என்றவாறு சந்திப்பு அமையப் பெற்றால், அதில் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், எம்.ஏ.சுமந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் கூட்டாகச் சந்திக்கக்கூடிய அருமந்த வாய்ப்பு ஏற்படும்.

இஃது ஜெனிவாவில் நாம் முன்வைக்க வேண்டிய முன்மொழிவு உட்பட பல விடயங்களைத் தக்கபடி தயார் செய்வதற்குப் பெருந்துணை புரியும்.

ஆகவே வருங்காலங்களில் வெளிநாட்டுப் பிரதிநிதிகளுடனான சந்திப்பை தமிழ்த் தேசியம் சார்ந்த தமிழ்த் தரப்புகளுடன் நடத்துவது சாலச் சிறப்புடையதாகும்.

## அரச நிறுவனங்களை இராணுவம் கையகப்படுத்தவில்லை-கமால்

(கொழும்பு)

சாரதி அனுமதிப் பத்திரத்தை இராணுவத்தினர் அச்சிடுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை தற்காலிகமானது என்றும் இது அரச நிதியை சேமிப்பதற்கான நடவடிக்கை என்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால்குணரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், அரச நிறுவனங்களை இராணுவம் கையகப்படுத்தவில்லை.

மேலும் மோட்டார் போக்குவரத்துத் துறையின் மற்ற நடவடிக்கையில் எவ்வித மாற்றங்களும் இடம்பெறவில்லை என்றும். இராணுவம் அச்சிடும் பணியில் மட்டுமே ஈடுபடுவதாகவும்பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

எனவே அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட ஒரு நிரந்தரமான முயற்சி இது அல்ல என்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார். (நி-4)

## பாடசாலையில் திருட்டு

(இளவாலை)

கீரிமலை பிரதேசத்திலுள்ள பாடசாலையில் பல இலட்சம் பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்ட சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பில் தெரியவருகையில், கீரிமலை வழித்தொண்டல்றோமன்கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் காரியாலய கதவு உடைக்கப்பட்டு 2 இலட்சம் ரூபாய் பெறுமதியான கணனி, இலத்திரனியல் பொருட்கள் என்பன களவாடப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் இளவாலை பொலிஸ் நிலையத்திற்கு தெரியப்படுத்தியதையடுத்து சம்பவ இடத்திற்கு வருகைதந்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(நி-4)

## படைப்புழுவின் தாக்கத்தால் முற்றிலும் அழிந்த சோளப்பயிர்

(நெலுக்குளம்)

வவுனியாவில் சில இடங்களில் சோளப்பயிர்ச்செய்கை முற்றிலுமாக அழிவடைந்துள்ளது.

வவுனியா பூவரசங்குளம் பகுதியில் மேட்டுப்பயிர் செய்யப்பட்ட இடங்களில் சோளப் பயிர்கள் படைப்புழுவின் கடுமையான தாக்கத்தினால் அழிவடைந்துள்ளது.

இதனால் சோளப் பயிர்ச்செய்கையினை முற்றிலுமாக கைவிட வேண்டியுள்ளதாக அப்பகுதி சோளப் பயிர்ச் செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

சுமார் 13 தொடக்கம் 14 ஏக்கர் வரையான சோளம் இம்முறை அழிவடைந்துள்ளது. இதனால் மக்கள் இம்முறையும் பாரிய நட்டத்தை சந்தித்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக விவசாயி ஒருவர் கூறுகையில்,

நாம் வருடந்தோறும் மேட்டுப்பயிர்ச் செய்கையை செய்து வருகின்றோம்.

அதேபோன்று இம்முறையும் அதிகமாக சோளப் பயிர்ச்செய்கை செய்திருந்தோம். மொத்தமாக 14 ஏக்கர் சோளம் செய்யப்பட்டுள்ளது.

நானகு ஏக்கர் சோளம் பயிரிட்டேன். உழவு, கூலி, சோளம் விதை, மருந்து, பசளை, நடுகை கூலி என ஒன்றரை இலட்சம் செலவு செய்திருந்தேன்.

இதனை அறுவடை செய்தால் மூன்று இலட்சம் ரூபாய் இலாபத்தை எடுத்திருப்போம். இந்த படைப் புழுத்தாக்கத்தினால் முழுவதும் அழிவடையும் நிலையில் உள்ளது.

இதனை கைவிட்டால் செலவு செய்ததும் வராது என்ன செய்வது என்று தெரியவில்லை. இது தொடர்பான அதிகாரிகள் பார்வையிட்டிருந்தனர். எமக்கு இந்த நட்டத்திற்கான ஓர் உதவித் திட்டத்தை மானிய முறையில் தந்துதவுவார்கள் என நம்புகின்றோம் என அவர் தெரிவித்தார். (நி-299)

## சிகிச்சை நிறைவடைந்து 20 பேர் வெளியேற்றம்

(முறிகண்டி)

கிளிநொச்சி கொரோனாச் சிகிச்சை நிலையத்திலிருந்து 20 பேர் சிகிச்சைகள் முடித்து நேற்று வெளியேறினர். நேற்று காலை 8.30 மணிவரை வெளியான தகவல்களின் அடிப்படையில் வடக்கு மாகாண தொற்று நோய் வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ள கொவிட்-19 சிகிச்சை நிலையத்திலிருந்து சிகிச்சை முடிவடைந்த நிலையில் 20 பேர் வெளியேறியுள்ளனர்.

அதேவேளை 28 புதிய நோயாளர்கள் குறித்த சிகிச்சை நிலையத்துக்கு வருகை தந்துள்ளதாகவும், அவர்களில்28 பேரும் பெண்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அவர்களுடன் மொத்தமாக 77 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கின்றனர். இதில் 22 ஆண்களும், 55 பெண்களும் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் 5 வயதுக்குட்பட்ட ஒருவரும், 5-13 வயதுடையவர்கள் மூவரும், 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் மூவரும் அடங்குவதுடன் ஏனையோர் இளவயதுடையவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (4-5-100)

## ஆன்மீகச் சிந்தனைகள்

### உழைப்புக்கு உயர்வு உறுதி

❖ பொறாமை,ஆசை,சினம்,கடுஞ்சொல் இவற்றை அகற்றி வாழ்வதே அறவாழ்வாகும். தீயினால் சுட்ட புண்கூட நாளடைவில் ஆறிவிடும். ஆனால், நாவினால் சுட்ட வடு ஆறவே ஆறாது.

❖ மதிப்பு இல்லாதவரையும் ஒரு பொருட்டாக மதிக்கச் செய்யும் தன்மை பொருள் வளத்திற்கு உண்டு. அப்பொருளைப் போல மதிப்புமிக்க பொருள் வேறொன்று உலகில் இல்லை.

❖ உழைக்க உறுதி கொண்டவன் எதிலும் வெற்றி பெறு கின்றான். பொது வாழ்விலும் தனிமனித வாழ்விற்கும் உழைப்பே உயர்வு தரும். சோம்பல் ஒருவனை நரகத்திற்குத் தான் கொண்டு போய்ச் சேர்க்கும்.

❖ எவ்வளவு கிடைத்தாலும் அடங்காத தன்மையுள்ள ஆசையை ஒருவன் அடக்கப் பழகிவிட்டால், அப்போதே அவன் பிறப்பில்லாத பேரின்ப நிலையைப் பெறுகிறான்.

❖ ஒழுக்கத்தினால் சிறப்பு உண்டாவதால் ஒவ்வொருவரும் ஒழுக்கத்தை உயிராக மதித்துப் போற்றி மதிப்பார்கள்.

❖ தன்னை அகழ்ந்து பள்ளம் உண்டாக்குபவரையும் பொறுத்துக் கொண்டு நிற்கும் பூமியினைப் போல, தம்மை இகழ்ச்சியாக எண்ணுபவரையும் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலை களுக்காக நாளை 7 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** மாவிட்டபுரம், சரவணைசந்தி ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** கூடுவெந்துலவு கிராமம், குடாகச்சக்கொடிய கிராமம், குளுமாட்டுசந்தி, ஓமந்தை வீட்டுத் திட்டம், Senok,யூனியன் அஷோய்ஸ், தொழில் நுட்பக் கல்லூரி ஓமந்தை, நெளுக்குளத்திலிருந்து பம்பைமடு வரை, நெளுக்குளம் தொழில்நுட்பக் கல்லூரி, நெளுக்குளம் நீர்ப்பாசன சபை, சின்ன சிப்பிக்குளம் ஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத்தில்** கற்கிடந்தகுளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# சனிப் பெயர்ச்சி பலன்கள்



## 27.12.2020 முதல் 20.12.2023 வரை

## பதினோராமிடத்தில் சனி! பண வரவுதான் இனி!

## ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்

**மீன இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 10 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த சனி பகவான், 26.12.2020 அன்று 11 ஆம் இடமான இலாப ஸ்தானத்தில் அடியெடுத்து வைக்கின்றார். உங்கள் இராசிக்கு இலாப ஸ்தானம் மற்றும் விரய ஸ்தானத்திற்கு அதிபதியானவர் சனி. அவர் இலாப ஸ்தானத்தில் தனது சொந்த வீடான மகரத்தில் சஞ்சரிக்கும் பொழுது, தொழில் வளம் மிகச் சிறப்பாக இருக்கும். எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதல் இலாபம் வந்து குதூகலத்தை வழங்கும். கௌரவம், அந்தஸ்து உயரும். சுபகாரியங்கள் மளமளவென்று நடைபெறும் பொருளாதாரத்தில் உச்ச நிலையை அடைய சந்தர்ப்பங்கள் கைகூடிவரும்.

மகர இராசியில், உங்கள் இராசிநாதன் குரு பகவான் நீச்சம் பெற்றுச் சஞ்சரிக்கின்றார். அவரோடு இப்பொழுது சனி பகவானும் இணைந்து 'நீச்சபங்க இராஜயோக'த்தை உருவாக்குகிறார்கள். 10 இற்கு அதிபதி குரு 11 இல் சஞ்சரிப்பதால் புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். கேட்ட இடத்தில் உதவிகளும் கிடைக்கும். அரசியல் சார்ந்த பிரமுகர்களால் ஆதாயம் உண்டு.

**இலாப ஸ்தானச் சனியின் ஆதிக்கம்**

டிசெம்பர் 26 ஆம் திகதி முதல் உங்கள் இராசிக்கு 11 ஆம் இடத்தில் சனி பகவான் சஞ்சரிக்கப் போகின்றார். அந்த இடம் இலாப ஸ்தானம் என்று சொல்லப்படுவதால் இதுவரை எவ்வளவு முயற்சி செய்தும் முடிவடையாத தொழில் தொடர்புகள், இப்பொழுது முடிவடைந்து பெருந்தொகை கையில் புரளும். புதிய ஒப்பந்தங்கள் வந்து கொண்டே இருக்கும்.

**சனியின் பார்வைப் பலன்கள்**

உங்கள் இராசிக்கு 11 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் சனி பகவான், உங்கள் இராசியையும் 5, 8 ஆகிய இடங்களையும் பார்க்கப் போகின்றார். உடல் நலம், குடும்பம், புகழ், ஆரோக்கியம், பூர்வ புண்ணியம், பிள்ளைகள், பூர்வீகச் சொத்துக்கள், ஆயுள் விருத்தி, ஆரோக்கியம் போன்றவற்றை எல்லாம் அறிந்து கொள்ளும் விதத்தில் சனியின் பார்வை பதிவதால், அதற்கேற்ற பலன்கள் உங்களுக்கு வந்துசேரும்.

குறிப்பாக சனி இராசியைப் பார்ப்பதால் ஆரோக்கியத் தொல்லை வரத்தான் செய்யும். உங்களுக்கோ, உங்களைச் சார்ந்த குடும்பத்தினருக்கோ உடல் நலப் பாதிப்பும் மருத்துவச் செலவும் உண்டு. செல்வாக்கு அதிகரிக்கும்.

சனியின் பார்வை 5 இல் பதிவதால் பிள்ளைகள் வழியில் நல்ல தகவல் வந்து சேரும். பிள்ளைகளின் மேற்படிப்பை முன்னிட்டு நீங்கள் செய்த ஏற்பாடுகள் பலன் தரும். படித்து முடித்த பிள்ளைகள் வேலை வாய்ப்பிற்காகச் செய்த முயற்சியும் கைகூடும். பெண் பிள்ளைகளின் சுபச்சடங்குகளில் மட்டுமல்லாமல் பெற்றோர்களின் முத்துவிழா, பவள விழா போன்ற விழாக்கள் மற்றும் புது மனை புகுவிழாக்கள் நடத்தும் யோகம் உண்டு. 'பூர்வீக இடம் கையை விட்டுப் போய்விட்டதே' என்று கவலைப்பட்டவர்களுக்கு, புது இடம் சொந்த ஊரிலேயே வாங்கி மகிழும் வாய்ப்பு உண்டு. சனியின் பார்வை அஷ்டம ஸ்தானத்தில் பதிவதால் இழப்புகளை ஈடுசெய்ய புதிய வாய்ப்புகள் கைகூடிவரும்.

**சனியின் பாதசாரப் பலன்கள்**

27.12.2020 முதல் 27.12.2021 வரை:சூரியன் சாரத்தில் சனி சஞ்சரிக்கும் பொழுது, எதிரிகளின் தொல்லை கொஞ்சம் அதிகமாகவே இருக்கும். திட்டமிட்ட காரியத்தை திடீர் திடீரென மாற்றுவீர்கள். உங்கள் இராசிக்கு 6 இற்கு அதிபதியாக சூரியன் விளங்குவதால் அரசு வழியில் எதிர்பார்த்த உதவிகளில் தாமதம் ஏற்படும். ஆதரவுக்கரம் நீட்டுவதாகச் சொன்னவர்கள் விலகிக் கொள்வர். ஒரு கடனை அடைக்க மற்றொரு கடனை வாங்கும் சூழ்நிலை ஒரு சிலருக்கு ஏற்படும். நீங்கள் என்ன செய்




தாலும் குடும்பப் பெரியவர்கள் நன்றி காட்ட மாட்டார்கள். உத்தியோகத்தில் சக பணியாளர்களால் தொல்லை உண்டு.

28.12.2021 முதல் 26.01.2023 வரை:சந்திரன் சாரத்தில் சனி சஞ்சரிக்கும் பொழுது, திட்டமிட்ட பணிகளைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள்.

திடீர் முன்னேற்றம் வந்து சேரும். கல்யாணச் சீர்வரிசைப் பொருட்கள் வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள். வர்த்தகம் சார்ந்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடிந்து மகிழ்ச்சி காண்பீர்கள். 'வெளிநாட்டிலிருந்து வரும் அழைப்புகளை ஏற்றுக்கொள்ளலாமா?' என்று சிந்திப்பீர்கள்.

27.01.2023 முதல் 19.12.2023 வரை: செவ்வாய் சாரத்தில் சனி சஞ்சரிக்கும் பொழுது, வாழ்க்கைப் பாதையில் நல்ல மாற்றங்கள் வரும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். கொடுக்கல்- வாங்கலில் இலாபம் உண்டு. வீண் கவலைகள் அகலும். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் முயற்சி கைகூடும். உறவினர்களின் மன வருத்தங்கள் மாறும். நீண்ட நாள் பிரார்த்தனைகள் நிறைவேறும். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் நட்பால் அனைத்து வழிகளிலும் நன்மை கிடைக்கும். உத்தியோகத்தர்கள், 'விருப்ப ஓய்வில் வெளிவந்து தொழிலைத் தொடங்கலாமா?' என்று யோசிப்பர். இக்காலத்தில் சனியும் கும்பத்தில் சஞ்சரிக்கப் போகின்றார். எனவே வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பதில் இருந்த தடைகள் அகலும்.

**குருப்பெயர்ச்சிக் காலம்**

சனிப்பெயர்ச்சி காலத்தில் மூன்று முறை குருப்பெயர்ச்சி நிகழ்கிறது. கும்ப இராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் விரய ஸ்தானத்தில் இருப்பதால் விரயங்கள் அதிகரிக்கும். வீடு மாற்றங்களும் இட மாற்றங்களும் உருவாகும். தொழிலில் கவனம் தேவை. குடும்பச் சுமை கூடும். மீனத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, இராசிநாதன் இராசியிலேயே சஞ்சரிப்பதால் நல்ல பலன்கள் இல்லம் தேடி வரும். எதிரிகள் விலகுவர்.

மேஷத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, குடும்ப ஒற்றுமை பலப்படும். கொடுக்கல்-வாங்கல்கள் திருப்தி தரும். உடன்பிறப்புகளின் ஒத்துழைப்போடு உன்னத நிகழ்வு இல்லத்தில் நடைபெறும். உத்தியோகத்தில் உயர் பதவி உண்டு.

**ராகு- கேது பெயர்ச்சிக் காலம்**

21.03.2022 இல் நடைபெறும் ராகு-கேது பெயர்ச்சியின் போது, மேஷத்தில் ராகுவும் துலாத்தில் கேதுவும் சஞ்சரிக்கப் போகின்றனர். மேஷ ராகுவின் ஆதிக்க காலத்தில் பணப்புழக்கம் நன்றாக இருக்கும். குடும்பத்தில் உள்ளவர்களின் குறைகளைத் தீர்க்க முன்வருவீர்கள். பற்றாக்குறை மாறும். விலகிச்சென்ற சொந்தங்கள் மீண்டும் வந்திணைவர். அஷ்டமத்தில் கேது இருப்பதால் அலைச்சல் அதிகரிக்கும். ஆரோக்கியத்தில் பாதிப்புகள் ஏற்படலாம். விரயங்கள் கூடும்.

08.10.2023 இல் நடைபெறும் ராகு-கேது பெயர்ச்சியின் போது, மீனத்தில் ராகுவும் கன்னியில் கேதுவும் சஞ்சரிப்பார்கள். இந்தக் காலகட்டத்தில் ஆரோக்கியத்தில் அடிக்கடி தொல்லைகள் ஏற்படும். மருத்துவச் செலவுகள் கூடலாம். திட்டமிட்ட காரியங்களைத் திட்டமிட்டபடி செய்ய இயலாது.

**வெற்றி பெற வைக்கும் வழிபாடு**

வியாழக்கிழமை தோறும் விரதமிருந்து தட்சிணாமூர்த்தியை வழிபடுவதோடு, இல்லத்து பூஜை அறையில் வள்ளி-தெய்வானை உடனாய முருகன் படம் வைத்து முருகப்பெருமானுக்குரிய பதிகங்களை பாடி வழிபடுவதன் மூலம் முன்னேற்றத்தின் முதல்படிக்குச் செல்லலாம்.

**சனியின் வக்கிர காலம்**

12.05.2021 முதல் 26.09.2021 வரை, 25.05.2022 முதல் 09.10.2022 வரை, 27.06.2023 முதல் 23.10.2023 வரை என மூன்று முறை சனி வக்கிரமடைகின்றார். இக்காலத்தில் நன்மையும் தீமையும் கலந்தே நடைபெறும். தொழிலில் விரயங்கள் அதிகரிக்கும். அயல்நாடு சென்று வேலை கிடைக்காமல் திரும்பும் சூழ்நிலையும் உண்டு.



கடன் சுமையின் காரணமாக கட்டிய வீட்டைக் கொடுத்துவிட்டு வேறு இடம் வாங்கும் சூழ்நிலை ஏற்படும். நெருக்கடி நிலை அதிகரிக்கும். எதிலும் கவனம் தேவைப்படும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**

இந்த சனிப்பெயர்ச்சி நன்மை தரும் பெயர்ச்சியாகவே அமைகின்றது. குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். உடன் இருப்பவர்களின் அன்பும் ஆதரவும் அதிகரிக்கும். கணவன் - மனைவிக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். திருமணம், புத்திரப்பேறு ஆகியவற்றில் இருந்த தடைகள் அகலும். தாய் மற்றும் சகோதர வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். சேமிப்பு உயரும். பணிபுரியும் பெண்களுக்கு கூடுதல் பொறுப்புகள் வந்து சேரும். மேலதிகாரிகளின் பாராட்டு மழையில் நனைவீர்கள். வாகனம் வாங்க, வீடு கட்ட உதவி கேட்டு விண்ணப்பித்தவர்களுக்கு அது கைகூடும். பிள்ளைகளால் பெருமை சேரும். (முற்றும்)

## தமிழ் அரசியல்...

லாவது விடுவிக்க வேண்டும்.

தமிழ் அரசியல் கைதிகளுக்குப் பிணை யாளர்களாகத் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நாம் தயாராக உள்ளோம்."

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து வடக்கு, கிழக்கின் 8 மாவட்டங்களில் சிவில் அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் சார்பில் நேற்றுக் காலை 10 மணிக்கு கவனயீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இதை ஜனாதிபதி விளங்கிக் கொள்ள வேண்டும்.

இந்த நாட்டில் இடம்பெற்றது உரிமைப் போர். அதில் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் இன்று கொரோனாவின் பிடிக்குள் சிக்கியுள்ளனர்.

எனவே, அவர்களின் உயிர்களைப் பாதுகாக்க வேண்டியதன் நிமிர்த்தம் அவர்கள் அனைவரையும் உடனடியாக அரசு விடுதலை செய்ய வேண்டும் அல்லது அவர்களைப் பிணையிலாவது விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ் அரசியல் கைதிகளுக்குப் பிணை வைப்பதற்குத் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நாம் தயாராக உள்ளோம் என்பதையும் ஜனாதிபதியிடம் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இதனை சபையில் மக்கள் சார்பில் முன்வைக்க விரும்புகின்றேன் என்றார். (ம-3)

## முகக் கவசம்...

கொழும்பில் இவ்வாறு முகக்கவசம் அணியாது நடமாடிய 300 பேர் கட்டாய ரெபிட் அன்டிஜன் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோதே அவர்களில் இருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஜனவரி 5 முதல் முகக்கவசம் அணியாது பொது இடங்களில்நடமாடுபவர்களுக்கு கட்டாய ரெபிட் அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## ஜெனிவா விவ...

களிடம் பேசிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் 3 கட்சிகளின் பிரதிநிதிகளும் கொழும்பில் 6ஆம் திகதி சந்தித்து பேசவுள்ளதாக தெரிவித்தனர். இதன்போது வரைவு இறுதி செய்யப்படும் என்றும் கூறினார்கள்.

கொழும்பில் இன்று நடக்கும் கூட்டத்தில் 3 கட்சிகளின் பிரதிநிதிகள் தவிர, சில மனித உரிமை செயற்பாட்டாளர்களையும் எம்.ஏ.சுமந்திரன் தரப்பு அழைத்துள்ளது. நிமல்ஹா பெர்ணான்டோ, பாக்கியசோதி சரவணமுத்து உள்ளிட்டவர்களும் இதில் கலந்து கொள்வார்கள்.

எனினும், இதில் இணக்கப்பாடு எட்டப்பட வாய்ப்பு குறைவு என தெரிவிக்கப்படுகிறது. (ம-3)

## வெளிநாடு செல்...

கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, பூநகரி பிரதேசத்தை சேர்ந்த ஒன்பது பேரும் பளை மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவருமாக பதினொரு பேர் வெளிநாடு செல்வதற்காக கொழும்புக்குச் சென்று தங்கியிருந்த போது அவர்களுக்கு பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த பிசிஆர் முடிவுகள் வெளிவர முன்னர் குறித்த இளைஞர்கள் வான் ஒன்றில் கொழும்பிலிருந்து சொந்த ஊர்களுக்கு நேற்றுக் காலை திரும்பியுள்ளனர்.

இவர்களில் 7 பேர் வான் மூலம் வருகைதந்துள்ள நிலையில் ஏனையவர்கள் தனியார் பேருந்துகளை பயன்படுத்தி வருகை தந்துள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதில் அளவெட்டியைச் சேர்ந்த ஒருவருக்கும், கிளிநொச்சி பூநகரி பள்ளிக்குடாவைச் சேர்ந்த இருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் கொழும்பிலிருந்து கிடைக்கப் பெற்ற தகவல்களின் அடிப்படையில் உடனடியாக குறித்த இளைஞர்கள் கிளிநொச்சி கிருஸ்ணபுரம் கொரோனா சிகிச்சை நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

அத்தோடு குறித்த வானில் பயணித்த ஏனையவர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார தரப்பினர் குறிப்பிட்டுள்ளனர். (ம-3,100,316)

## வடக்கில் நேற்றும்...

னர் ஒருவர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டதையடுத்து அந்தப் பகுதி தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியைச் சேர்ந்த 5 பேருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மன்னார் எருக்கலம்பிட்டி பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்று உறுதிப்படுத்தப்பட்டது. அவர்களது குடும்பத்தைச் சேர்ந்தவர் கொழும்பு சென்ற நிலையில் கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டது. அதனால் அவரது குடும்பம் தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் நேற்று பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

அத்துடன், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கிளிநொச்சி வளாகத்தில் பயிலும் கேகாலையைச் சேர்ந்த 23 வயது மாணவிக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மருதனார்மடம் கொத்தணியுடன் தொடர்புடைய உடுவிலைச் சேர்ந்த ஒருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் நல்லூரில் வசிக்கும் ஒருவர் கொழும்பு சென்று திரும்பிய நிலையில் பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார். அவருக்கும் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.(ம-3,18,250,285,299)

## 255...

யடுத்து நாட்டில் கொரோனா தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 45,721 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் 6 ஆயிரத்து 989 கோவிட் - 19 நோயாளர்கள் சிகிச்சை மையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-3)

## கொரோனாவால்...

னர்.

இதற்கமைய இலங்கையில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 217 ஆக அதிகரித்துள்ளது.

மாத்தளை மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களை சேர்ந்த 68 மற்றும் 75 வயதுகளையுடைய இரு பெண்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.(ம-3)

## 29...

உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறை வீதி நல்லூரைச் சேர்ந்த 29 வயதுடைய தெய்வேந்திரம் தர்சன் என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கடந்த 2ஆம் திகதி திருநெல்வேலிப் பகுதியிலுள்ள முடி திருத்தகம் ஒன்றில் முடி திருத்திக் கொண்டிருந்த குறித்த இளைஞன் மயங்கி விழுந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். எனினும் சிகிச்சை பலனின்றிஅவர்நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம்பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## மாணவர்களின் உணவு தவிர்ப்பு

### போராட்டம் முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சம்பிரதாயபூர்வ வாயிலில் நேற்று முன்தினம் முதல் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மாணவர்களின் போராட்டம் முடிவுக்கு வந்துள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா மாணவர்களுக்கு நீராகாரம் கொடுத்து உணவு தவிர்ப்பை முடித்து வைத்துள்ளார். (ம-3,33)

## இந்திய வெளி...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பதவியேற்றார். இதனைத் தொடர்ந்து மறுநாளே இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் இலங்கைக்கு விஜயம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

அரசுமுறை பயணமாக வருகை தந்திருக்கும் ஜெய்சங்கர் இலங்கை ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அரச தரப்பை இந்த விஜயத்தின்போது சந்திக்க இருப்பதாக உத்தியோகபூர்வமாக தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தரப்பையும் சந்திக்க இருப்பதாக அதன் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-3)

*(இச்செய்தி அச்சுக்கு போகும்வரை ஜெய்சங்கர் அரச தலைவர்களுடன் சந்திப்பு தொடர்புடைய தகவல்கள் வெளியாகவில்லை)*


தன நிதானய
திகதி - 2021.01.05
சீட்டிழுப்பு இலக்கம் - 395
E 13 19 58 76
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 05.01.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2653
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
N 09 12 14 56

மஹஜன சம்பத
திகதி 2021/01/05
சீட்டிழுப்பு இலக்கம் 4358
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
Y 8 8 0 3 6 0

சபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2021/01/05
1563 சீட்டிழுப்பு இலக்கம்
சுப்பர் இலக்கம் 13
வெற்றி இலக்கங்கள் 24 26 27 46

மெகா பவர்
திகதி 05/01/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0725
V 16 33 36 67 76

அத கோடிபதி ADA KOTIPATHI
கிழமை: செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 1154
வர்ணம்: இள நீலம்
சீட்டிழுப்பு திகதி: 05.01.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 96,169,060
வெற்றி இலக்கங்கள் 11 12 18 32 H
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
கிழமை: செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 3484
வர்ணம்: இள நீலம்
சீட்டிழுப்பு திகதி: 05.01.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 39,068,223
வெற்றி இலக்கங்கள் 07 24 26 52 P
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் 25,46,768/=
திகதி: 05.01.2021
வெற்றி வாரம்: 3035
வர்ணம்: சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 06 14 33 54
கடகம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 97,32,320

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1328
நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 05/01/2021
தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
A 13 32 33 75
அடுத்த சுப்பர் ஜக்பொட் 61,631,769

ஜய
சீட்டிழுப்பு வாரம் 673
திகதி 05.01.2021
செவ்வாய்
J 19 59 71 76
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 78,436,475
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

# தீர்வினை பெற்றுத்தர மூன்று கட்சிகள் ஒன்றிணைந்திருப்பது மகிழ்ச்சியாக உள்ளது

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள்

(கிளிநொச்சி)

**மூன்று கட்சிகளும் கடந்த காலங்களை போன்றல்லாது ஒன்றாக இணைந்து எமக்கு தீர்வினை பெற்றுதர வந்துள்ளமை மகிழ்ச்சியாக உள்ளது என வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத் தலைவி கலாரஞ்சினி தெரிவித்துள்ளார்.**

**கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.**

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சிவில் அமைப்புக்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சி உறுப்பினர்கள், மத குருமார் என அனைவரும்சேர்ந்து இம்முறை மார்ச் மாதம் இடம்பெறவுள்ள ஐ.நா மனித உரிமை கூட்டத் தொடரில் இலங்கைக்கு கால நீடிப்பை வழங்கக்கூடாது என அனைவரும் ஒன்றிணைந்து நீதி கிடைக்க வேண்டும் எனவும் ஒரு கோரிக்கையை முன்வைக்க உள்ளோம்.

முன்னைய காலகட்டத்தில் இலங்கை அரசாங்கத்திற்கு கால நீடிப்புக்கள் வழங்கப்பட்டன. அவர்கள் கால நீடிப்பை பெற்றுக்கொண்டதற்கான விடயங்களை நிறைவேற்றவில்லை.

எனவே இம்முறை இலங்கை அரசாங்கத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி, அதன் ஊடாக ஒரு தீர்வினை பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றோம்.

முன்னைய காலங்களை போன்று அல்லாது மூன்று கட்சிகளும் கடந்த காலங்களை போன்றல்லாது ஒன்றாக இணைந்து எமக்கு தீர்வினை பெற்றுதர வந்துள்ளமை மகிழ்ச்சியாக உள்ளது எனவும் அவர் இதன்போது குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறான நிலையில் எமது கோரிக்கைக்கு அமைவாகவும், பாதிக்கப்பட்ட எமக்கு நீதி கிடைக்கவும் சர்வதேச நாடுகள் ஒன்றிணைந்து இலங்கை விடயம் தொடர்பில் நீதியான பொறிமுறை ஒன்றை உருவாக்கி நீதியை பெற்று தரும் என நம்புவதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

(ம-03,100)


றோயல்

தேன் வாங்கும் வியாபாரிகள் மற்றும் வாடிக்கையாளர்கள் கவனத்திற்கு!!!

நீங்கள் "றோயல் தேன்" வாங்கும் போது கீழே கொடுக்கப்பட்டுள்ள விடயங்களை கவனத்திற் கொண்டு வாங்கவும்.




- படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு சிவப்பு நிற தகர மூடியில் றோயல் என ஆங்கிலத்தில் வெள்ளை நிற எழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளதா எனவும், வெள்ளை நிறத்தில் கிரீடம் உள்ளதா எனவும் பார்த்து வாங்கவும்.
- மற்றும் லேபலில் மூன்று மொழிகளிலும் றோயல் தேன் என அச்சிடப்பட்டுள்ளதா என வாசித்துப் பார்த்து வாங்கவும்.

உங்கள் நலன் கருதி ஆய்வு கூடத்தில் தரம் பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகின்றது.

Packed By: ® Royal Industries, Jaffna.

ஏக விநியோகஸ்தர்:

சிவா நறுமணப் பூங்கா®

இல: 288,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

தொ.பே: 021 222 2567

(C-1097)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், பலாலி வீதி, கோண்டாவில் சந்தியில் இருந்து இருபாலை வீதியில் 9 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

1 1/2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.

[ கோண்டாவில் சந்தியில் இருந்து 500 M தூரம் ]

(தரகர் தேவையில்லை)

077 288 0152
077 505 8561

**காணி தேவை**

யாழ்ப்பாணம், நல்லூர்,மானிப்பாய்,கோப்பாய் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட இடங்களுக்குள் 10 பரப்பு தொடக்கம் 30 பரப்பு வரையான காணிகள் தேவை. (தரகர் தேவையில்லை)

(5190)

076 221 2037

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

**றாஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

*வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.*

தொடர்பு: றாஜ் - 077 679 6623

(4867)

**காணி விற்பனை**

யாழ்ப்பாணம், மானிப்பாய் மேற்கு, கட்டுடைச் சந்தியில் இருந்து நவாலி வீதியில் 12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.

1 பரப்பின் விலை ஐந்து இலட்சம்

( தரகர் தேவையில்லை )

(5190)

074 075 4204

**விரைவு பொதிகள் சேவை**

V2 TRAVELS

UK-1000/=Kg

பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
- நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி

0768226240 DHL

(C-1051)

**வெளிநாட்டு வேலை வாய்ப்பு**

**SRIGHAN FARMS LTD, GHANA.**

பதவி - களஞ்சியப் பொறுப்பாளர்

தகைமை - A/L சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- ஆங்கில அறிவு அவசியம்.
- குறைந்தது இரண்டு வருட அனுபவம்.

வயது - 27 - 40 வரை

- விசா ஒழுங்குகள் செய்து தரப்படும்.
- உணவு தங்குமிட வசதிகள் உண்டு.
- சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
- இரண்டு வருடத்திற்கு ஒருமுறை விடுமுறை - இலவச விமான பயணச்சீட்டு வழங்கப்படும்.

(C-1100)

விண்ணப்பிக்கும் E-mail Address : sales@srighanfarms.com

விபரங்களுக்கு *SATHAPONS, ALVAI*

*www.srighan.com*

**CERTIFICATE IN HOTEL AND RESORT MANAGEMENT**



09.01.2021 அன்று புதிய பிரிவுகள் ஆரம்பம்

- பகுதி நேர / முழு நேர கற்கை நெறி
- படிக்கும் போதே வேலை வாய்ப்பு
- வெளிநாட்டில் உயர்கல்வி தொடரும் வாய்ப்பு
- சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்
- படித்து முடித்ததும் 100% வேலை வாய்ப்பு

G.C.E O/L உடன்

TUTION FEE 30,000/- ONLY

CTHI

CANADIAN TOURISM & HOSPITALITY INSTITUTE
1544, KKS ROAD, KONDAVIL, JAFFNA
0760579999 | 0213146171

(C-1101)

**அண்ணா விரைவுப் பொதிகள் சேவை**

பிரான்ஸ் டென்மார்க் பெல்ஜியம் ஜேர்மனி கொலண்ட் ஸ்பெயின் 1150/=

5kgக்கு மேல் 11kgக்கு மேல் 21kgக்கு மேல் கட்டணம் குறைவு

லண்டன் 1050/= இத்தாலி 1250/=

மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் இல்லை

கனடா- அமெரிக்கா- 1450/= சுவிஸ்- 1350/= (வரி உள்ளடக்கப்படவில்லை)

உங்கள் இடங்களுக்கு வந்து பொதிகள் பெற்றுக் கொள்ளப்படும். (கட்டணம் வேறுபடும்)

பொதிகளுக்கு 20,000ரூபா பெறுமதி வரையான காப்புறுதிக் கட்டணம் இலவசமாக உள்ளடக்கப்பட்டுள்ளது

எம்முடன் இணைந்து பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்பு கொள்ளவும்

070 330 5500 077 888 9388 075 330 5500

976,கேகேஎஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை சண்டிலிப்பாய் சுன்னாகம் | நெல்லியடி ஆவரங்கால் சங்கத்தானை | புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் | கிளிநொச்சி வவுனியா மன்னார் | கனகராயன்குளம் மல்லாவி துணுக்காய்

(C-1093)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.01.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.